பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 09 புதன்கிழமை (22.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 125

சுகாதார நடைமுறையை பொதுமக்கள் கடைப்பிடிக்காததால்

## யாழில் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டு விடுமோ என அச்சம் ஏற்பட்டுள்ளது



வட மாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இணைப்பாளர் த.காண்டீபன் எச்சரிக்கை 15

கொரோனா அச்சம் முற்றாக நீங்கும்வரை

# பொதுத் தேர்தல் நடத்தப்பட மாட்டாது



தேர்தல் திகதி மீள்பரிசீலனை செய்யப்படும்
கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்
பின் மகிந்த தேசப்பிரிய

*(கொழும்பு)* கொரோனா அச்சம் முழுமையாக நீங்கும்வரை பொதுத் தேர்தல் நடத்தப்படாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

மறு அறிவித்தல்வரை

## மதுபான விற்பனை நிலையங்களை

மூடுமாறு உத்தரவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் உடனடியாக மூடுமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாட்டின் சில மாவட்டங்களில் ஊரடங்குச் 15

## மஞ்சள்தூளின் சில்லறை விலை

ரூ.750 நிர்ணயம்

(கொழும்பு)

ஒரு கிலோ மஞ்சள் தூளிற்கான அதிகபட்ச சில்லறை விலைக்கான வர்த்தமானி நேற்று வெளியாகியுள்ளது.

இந்நிலையில், ஒரு கிலோ மஞ்சள் தூளின் 15

ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கான

## தேர்தல் ஆணைக்குழுவின் வர்த்தமானிக்கு எதிராக

உயர்நீதிமன்றில் ஜே.வி.பி வழக்கு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யவுள்ளதாக 15

## கொரோனாவிலிருந்து மக்களை பாதுகாப்பதில் இலங்கை அரசு பின்வாங்கக்கூடாது

கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் கோரிக்கை

(கொழும்பு)

கொடிய கொரோனா வைரஸிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதிலிருந்து இலங்கை அரசு என்றுமே பின்வாங்கக்கூடாது என கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதலின் ஒரு வருட நிறைவை முன்னிட்டு கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மேற்படி அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுமக்களுக்கான பாதுகாப்பு என்ற விடயங் 15

## மேலும் 6 பேருக்கு நேற்று கொரோனா

தொற்றாளர்கள் 310 ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் நேற்று மேலும் 6 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடை 15

## யாழில் ஊரடங்கை ஒரு மாதம் நீடிக்க சிபாரிசு செய்திருந்தோம்

அரசு தேசிய மட்டத்தில் தீர்மானம் மேற்கொண்டுள்ளது - அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் ஊரடங்கை மேலும் ஒரு மாதம் நீடிக்கவே, சுகாதாரத் துறையினரின் ஆலோசனைக்கமைய சிபாரிசு செய்திருந்தோம்.

ஆனால் சுகாதார பகுதியினரின் அபிப் 15

மே 11இல் பாடசாலைகளை

## மீண்டும் திறக்கும் முடிவு மறு பரிசீலனை செய்யப்படும்

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

கொழும்பில் COVID-19 நோயாளிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்ததன் காரணமாக மே 11 அன்று பாடசாலைகளை மீண்டும் 15

## இலங்கையில் கொரோனாவிலிருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை

சதத்தை தாண்டியது

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டோரில் இதுவரை 102 பேர் பூரணமாக குணமடைந்துள்ளனர்.

நேற்று மாலை மேலும் இருவர் குணமாகியதையடுத்தே, இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 15

## நேற்று மட்டும் 650 பேர் கைது

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த 24 மணித்தியாலங்களில் 650 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச் 15

அவசர தேவைக்கே ஊரடங்கு தளர்த்தப்பட்டது

## சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தலை பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும்

கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

அவசர தேவைக்காக மட்டுமே ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தலை பின்பற்றி நடக்க வேண்டும் என அகில இலங்கை 15

## கணனி திருத்தம்

IPhone, Android Phoneகளும்
திருத்திக் கொடுக்கப்படும்.

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம். கனனிகள் விற்றல், வாங்குதல், பழைய கணனிகளும் வாங்கப் படும்.

தொடர்புகளுக்கு :
(1294) ALM Computer System - 077 243 8537


## வவுனியாவில் சலூன்களை பூட்ட உத்தரவு

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து சிகையலங்கார நிலையங்கள் மற்றும் பெண்கள் அழகு நிலையங்கள் என்பவற்றை மறு அறிவித்தல் வரை பூட்டுமாறு சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று பரவும் அபாயம் உள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்கும் நோக்கில் அனைத்து சிகையலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் பெண்கள் அழகு நிலையங்கள் என்பவற்றை பூட்டுமாறு சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இன்று முதல் அனைத்து அழகக நிலையங்களும் பூட்டப்படும் என வவுனியா அழகக கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ம-3,250)

## மணி விழா வாழ்த்து



22.04.2020 இல் அகவை 60ஐ பூர்த்தி செய்து மணிவிழா காணும்
எங்கள் அதிபர்

### திருமதி இராஜேஸ்வரி பாலேந்திரா

S.L.P.S-I (கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்)

### சேவை விபரம்

| பாடசாலை | பதவி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| கம்பளை உடுகம முஸ்லிம் மகாவித்தியாலயம் | ஆசிரியர் | 01.01.1984 | 10.05.1990 |
| கிளி/கண்டாவளை மகாவித்தியாலயம் | ஆசிரியர் | 11.05.1990 | 01.03.1999 |
| | பிரதி அதிபர் | 01.03.1999 | 31.12.2008 |
| கிளி/முருகானந்தா மகாவித்தியாலயம் | ஆசிரியர் | 01.01.2008 | 22.11.2009 |
| | பிரதி அதிபர் | 23.11.2009 | 17.01.2011 |
| கிளி/முருகானந்தா ஆரம்ப பாடசாலை | அதிபர் | 18.01.2011 | 22.04.2020 |

ஆளுமைமிகு அணங்கெனவே
அவனியிலே பிறந்தவரே
ஆரம்ப பாடசாலைக்கென - ஓர்
அன்னையென வாய்த்தவரே

முரசுநகர் பதியினிலே அவதரித்து
முரசுமோட்டை ஆரம்பப் பள்ளியினை
முதற் பேறாய் பெற்றவளே
அரசு போல வீற்றிருந்து
அரும்பணிகள் ஆற்றியவரே


சேவை பல செய்யவெனத்
தேர்ந்தெடுத்த இப்பணியை
சேமமுறச் செய்து கொண்டு
தேசமிகு புகழுடனே
ஓய்வு பெற்று உங்கள் நற்பணியை
உலகறிய வாழ்த்துகின்றோம்

பாராட்டி வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள்,
கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்

(C-9523)

## மரண அறிவித்தல்

### கந்தையா அருளானந்தம் (கிளியண்ணை)



யாழ்ப்பாணம் வேலன்பராயைப் பிறப்பிடமாகவும் சுவிஸர்லாந்தில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான கந்தையா அருளானந்தம் (கிளியண்ணை) அவர்கள் 19.04.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசமணி - அன்னம்மா தம்பதிகளினதும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - இரத்தினம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், தவமணி, இராசமலர் ஆகியோரின் அன்புக் கணவரும், துஷியந்தன், அரவிந்தன், தர்சினி, யுஜிதன், தயாளினி, அஜந்தன், யுஜிதா, பத்மலதன் ஆகியோரின் அன்பு தந்தையும், பத்மினி, சுமதி, இன்பகுமாரன், பத்மலோஜினி, கிருபாகரன், தர்சிகா, ஜெனந்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இஷான், வர்ஷா, த்ரிஷா, அருண், கிருஷ், சௌமியா, இனோயா, மதுலோயன், கவிகா, சகீஷ், சகானா, சங்கீத், நிதிஷ் ஆகியோரின் பேரனும், பொன்னம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மயில்வாகனம், தங்கராசா, வன்னியசிங்கம், மங்கையக்கரசி, நாகநாதன் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற சோமசுந்தரம், காலஞ்சென்ற சாந்தகுமாரி மற்றும் மனோரஞ்சிதம், சரோஜாதேவி, துரைராசா, சுசீலாதேவி, இராசநாயகம், அரசரத்தினம், பாலசிங்கம், நாகேஸ்வரி, மகேஸ்வரி, சுப்பிரமணியம், சந்திரமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

துக்கம் அனுஷ்டிக்கும் நிகழ்வு நாளை (23.04.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வேலன்பராய், தச்சன்தோப்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலன்பராய், தச்சன் தோப்பு. 077 991 0917 தகவல் : குடும்பத்தினர் (C-9521)

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
18
03
1956



விண்ணில்
21
04
2020

### அமரர் வடிவேலு நடராசா

(பிறப்பிடம் - கரவெட்டி, யாழ்ப்பாணம் வசிப்பிடம் - வற்றாப்பளை, முல்லைத்தீவு
ஓய்வு பெற்ற அதிபர், பொருளாளர் - அன்னதானசபை, வற்றாப்பளை அம்மன் கோவில்)

உங்கள் துயர் கேட்டு கலங்கினோம் ஐயா
காலன் உங்கள் கணக்கை தவறாக எண்ணியதால்
வானத்தை எட்டி நீங்கள் விரைவாக சென்றது ஏனோ
உங்கள் ஆதரவின்றி சபையினர் நாம்
ஒரு கணம் கலங்கி நின்றோம் ஐயா!
தொடர்ந்து நாம் உங்கள் ஆதரவின்றி
என்ன செய்வோம் ஐயா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னதானசபையினர், வற்றாப்பளை
கண்ணகி அம்மன் கோவில்.

(1297)

## யாழில் கொரோனா பரவ நான் காரணம் இல்லை

### சுவிஸ் போதகர் மறுப்பு



(லக்சம்பேர்க்)

யாழில் கொரோனா வைரஸ் பரவ தான் காரணம் இல்லை என யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் பரவக்காரணம்எனக்கூறப்படும் சுவிஸ் போதகர் சற்குணராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட காணொலியில், கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இலங்கைக்கு நானும் எனது சபையினரும் அநேக தரம் வந்து போகின்றோம்.

அதற்குக்காரணம்என்னவென்றால் நானும்எனது சபையார் யாவரும்இலங்கை தேசத்தையும் இலங்கை மக்களையும் அதிகமாக நேசிக்கின்றோம். அதிகமாக உபவாசத்தோடு கூட சபை மக்களாய் சேர்ந்து இலங்கைக்காக இலங்கை மக்களுக்காக பிரார்த்தனைகளை முன்னெடுத்திருக்கிறோம்.

அதேபோல தான் கடந்த மார்ச் மாதம் பத்தாம் திகதி கொழும்பு விமான நிலையத்தில் நானும், எனது மனைவியும் வந்து இறங்கினோம். நோய்களைக் கண்டறியும் கருவிகள் ஊடாக நாம் சென்றோம். எங்களுக்கு ஒரு நோயும் அப்போது இருக்கவில்லை.


மார்ச் மாதம் 15 ஆம் திகதி எல்லா வழிப்பாட்டுத் தலங்களிலும் வழிபாடுகள் நடந்தன. அதேபோன்று எங்களுடைய சபையிலும் வழிபாடுகளை நடத்தினோம். அங்கே எல்லாரும் வரவில்லை. அருகிலிருந்த குறிப்பிட்ட சிலரே வந்திருந்தனர்.

நாங்கள் எங்களுடைய ஆராதனையை எந்தச் செய்தித் தாளிலும் விளம்பரம் செய்யவில்லை. சாதாரணமாய் ஆராதனை நடத்தினோம்.

சீக்கிரமாக ஆராதனையை முடித்து விட்டு சீக்கிரமாக அனைவரையும் அனுப்பி விட்டு நான் கொழும்புக்கு திரும்பி விட்டேன் என குறித்த போதகர் தெரிவித்தார். (இ-114)

# உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த அனைவரையும் நான் கவலையுடன் நினைவுகூருகின்றேன்

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த அனைவரையும் கவலையுடன் நினைகூருகின்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைத் தீவில் நூற்றுக் கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களைப் பறித்தும் அங்கச் சிதைவுகளை ஏற்படுத்தியதுமான பாரிய பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்று நேற்றுடன் ஓராண்டு நிறைவுற்றது.

இந்நிலையில் இதுகுறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது முகப்புத்தகத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டார்.

"கொடூரமான உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்து இன்றுடன் (நேற்று) ஒரு வருடம்.

இந்தத் தாக்குதலில் உயிர் நீத்த, காயமடைந்த மற்றும் அங்கவீனமுற்ற இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் அனைவரையும் கவலையுடன் நான் நினைகூருகின்றேன்.

இலங்கையர்களாகிய அனைவரும் அவர்களுக்காக அஞ்சலி செலுத்துமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்" என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்ந்து யாழில் விசேட அஞ்சலி!





(யாழ்ப்பாணம்)

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்ந்து நேற்று செவ்வாய்க்கிழமை ஓராண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு யாழ்.ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் ஆயர் இல்லத்தில் நேற்றுக் காலை 8.45 மணிக்கு இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நினைவேந்தலில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவேல் அடிகளார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்கள் மிக விரைவில் மீள வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்யப்பட்டது. (இ-7)









மறவன்புலோ காற்றாலை நிறுவனத்தினரால் வடமாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டன. மறவன்புலோ காற்றாலை மின் உற்பத்தி நிலைய முகாமையாளர் ஜேம்ஸ் தலைமையில் அந்நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பத்மஸ்ரீ முணசிங்க கலந்துகொண்டு ஒலிபெருக்கி சாதனங்களை பெற்றுக் கொண்டார். பின்னர் குறித்த சாதனங்களை பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கு கையளித்தார். இந் நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதம பொலிஸ் அத்தியட்சகர், தென்மராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி ராஜபக்ஷ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-சுபேசன்)

### எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும்

## தவறான குற்றச்சாட்டுக்கள் ஏமாற்றமளிக்கின்றன -அரசு



(கண்டி)

சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை அரசாங்கம் செயற்படுத்தும்போது எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் தவறான குற்றச்சாட்டுக்கள் ஏமாற்றமளிப்பதாக உள்ளன என முன்னாள் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், பாதுகாப்புப் படையினர் மற்றும் சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் அரசியல் மயமாக்கப்பட வேண்டியதில்லை என்றும் அவை பின்பற்றப்பட வேண்டியவை என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க, சில அறிவுறுத்தல்களை வழங்கியதாகவும் அத்தகைய ஆலோசனையின் அடிப்படையில் ஜனாதிபதி தனது முடிவுகளை எடுத்து வருகின்றார் என்றும் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் முடிவெடுக்க ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டது என்றும் அச்செயலணி மற்றவர்களுடன் சேர்ந்து கலந்துரையாடல்களின் அடிப்படையில் முடிவுகளை எட்டுகிறது எனவும் தெரிவித்த கெஹலிய ஜனாதிபதி அத்தகைய முடிவுகளின் அடிப்படையில் தான் செயற்படுகிறார் எனவும் விளக்கமளித்தார். (இ-7)



## அரசியல் பற்றி விவாதிக்க இது சரியான தருணமல்ல

### நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)


கொரோனா வைரஸின் அச்சுறுத்தலை நாடு எதிர்த்துப் போராடும்போது அரசியல் பற்றி விவாதிக்க இது சரியான தருணமல்ல என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், பொதுமக்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்று சமூகப் பரவலாகுவதைத் தடுக்கும் பொருட்டே ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டது என்றும் நாமல் தெரிவித்தார்.

இதேவேளை இதுவரை அடையாளம் காணப்பட்ட அதிக ஆபத்து நிறைந்த பகுதிகளைப் பாதுகாப்பதற்காகவும் இந்த முடிவு எட்டப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஓராண்டு நிறைவு மலையகத்தில் நேற்று ஆன்மீக வழிபாடுகள்!



(ஹற்றன்)

இலங்கையில் கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையில் மலையகத்திலும் நேற்று ஆன்மீக வழிபாடுகள் இடம்பெற்றன.

ஓராண்டு நினைவுநாளான நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்கு தேவாலயங்களில் மணியோசை எழுப்பி வழிபாடுகளில் ஈடுபடுமாறும், வீடுகளில் விளக்கேற்றி இருநிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்திருந்தார். ஏனைய மதத்தவர்களிடமும் அவர் இவ் வேண்டுகோளை முன்வைத்திருந்தார். இதன்படி மலையகத்திலுள்ள தேவாலயங்களில் நேற்று விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. அத்துடன், கோயில்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள் என்பனவற்றிலும் உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி வழிபாடுகள் இடம்பெற்றன.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக மிகவும் பாதுகாப்பான முறையில் சமூக இடைவெளியைப் பின்பற்றியே இவ்வழிபாடுகள் இடம்பெற்றன.

கடந்த வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இந்தியாவில் கொரோனாவால் பாதிப்பு 18 ஆயிரத்தைத் தாண்டியது உயிரிழப்பு 590 ஆக உயர்ந்தது!

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்தைத் தாண்டியது. இதேவேளை பலியானோர் எண்ணிக்கை 590 ஆக உயர்ந்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. சமூகத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறியுள்ளவர்கள்ளை தனிமைப்படுத்தி கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்ட நிலையில், வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுவோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் உயர்கிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்று வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 18,601 ஆக உயர்ந்தது. நேற்றுக் காலை 8 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 1336 பேருக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டது. 47 பேர் மரணமடைந்தனர். இதன் மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 590 ஆக உயர்ந்தது. இதுவரை 3252 பேர் குணமடைந்தனர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் அதிகளவாக 4666 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 232 பேர் உயிரிழந்தனர். தலைநகர் டில்லியில் 2081 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது. 47 பேர் உயிரிழந்தனர்.

தமிழகத்தில் 1520 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை 17 ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொரோனாவை எதிர்கொண்டது போல ஜனாதிபதி கோட்டா தேர்தல் தொடர்பிலும் சரியான முடிவை எடுப்பார்

### அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டை அச்சுறுத்திக்கொண்டிருந்த கொரோனா தொற்றை எதிர்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சரியான முடிவை எடுத்திருந்தது போல நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான சர்ச்சைக்கும் தீர்வுகாண சரியான முடிவையே எடுப்பார் என கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா என்ற கொடிய வைரஸ் தொற்றை எதிர்கொள்ள துறைசார் தரப்புக்களான அமைச்சுக்கள், மருத்துவத்துறை, சுகாதாரத்துறை, முப்படையினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட தரப்புக்களை ஒன்றிணைத்து ஜனாதிபதி கோட்டாபய எவ்வாறு சரியான தலைமைத்துவத்தை கொடுத்து அத்தொற்றை நாட்டில் பரவ



விடாது வெற்றிகண்டாரோ அதே போல இலங்கையின் சட்டம் மற்றும் அரசியலமைப்புக்கள் பாதுகாக்கப்படும் வகையில் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்ற கேள்விகளுக்கும் பொருத்தமான தீர்வை வழங்குவார் என நம்புகின்றேன்.

அத்துடன் நாட்டின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருப்பதனால் தான், உலகையே உலுக்கிக்கொண்டிருக்கும்கொரோனா என்ற கொடிய வைரஸ் தொற்றை எதிர்கொண்டு எமது நாடு வெற்றி கண்டுள்ளது என்ற உணர்வு மக்களிடையே இன்று ஏற்பட்டுள்ளது.

எனவே சமூக இடைவெளிகளைக் கடைப்பிடிப்பது உள்ளிட்ட சுகாதாரத் தரப்பினரது ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதியால் கூறப்படும் அறிவுறுத்தல்களை மக்கள் முழுமையாகக் கடைப்பிடித்து கொரோனா வைரஸ் தொற்றை முற்று முழுதாக எமது பகுதிகளிலிருந்து ஒழித்து இயல்பு நிலையை முழுமையாகக்கொண்டு வர அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.(இ-7)

## ஊரடங்கு தளர்வானது பலரது தியாகங்களை பயனற்றதாக்கியுள்ளது

### ஆனல்ட் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா தாக்கத்திலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும்வகையில் இடைவிடாது தொடரப்பட்ட ஊரடங்கானது யாழிலும் விலக்கப்பட்டது.

இக்கொடிய வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு சுகாதாரத் துறையினர், வைத்தியர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் வழங்கிக்கொண்டிருக்கும் தியாகங்களும் சேவைகளும் ஊரடங்கு தளர்வினால் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்குத் தளர்த்தப்பட்ட ஊரடங்கினால் மக்களின் அன்றாடத் தேவைகளுடன் தொடர்புபடாத பல கடைத் தொகுதிகள் யாழ்.நகர்ப்பகுதியில் செயற்பட்டமையைக் காணக் கூடியதாக இருந்தது. குறிப்பாக மதுபானசாலைகளில் அதிகமானோர் அலைமோதியதை அவதானிக்க முடிந்தது. இவை மிகுந்த வேதனைக்குரிய விடயமாகும். அத்தியாவசியமற்ற கடைத் தொகுதிகளை வைரஸ் தாக்கம் தீவிரமடைந்து கொண்டிருக்கும் இக் காலப்பகுதியில் மூடி ஒத்துழைப்பு வழங்குவதே சிறப்பானதாகும். இதனை உரிய தரப்பினர் உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும் என்பது எனது பகிரங்கமான வேண்டுகோளாகும்.

ஊரடங்கு தளர்வானது மக்களின்அன்றாட தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே அமைந்திருக்க வேண்டும். ஆனால் மக்கள் வீதிகள், கடைத் தொகுதிகள் மற்றும் பேருந்துகளிலும் வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத்துறையினர் கற்றுத்தந்த சமூக இடைவெளி, சுகாதார நடைமுறைகளை மறந்து பொறுப்பற்ற வகையில் செயற்பட்டமையை அவதானிக்க முடிந்தது. சிலரின் இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகள் பாரிய விளைவுகளை சமூகத்தில் ஏற்படுத்தும் என்பதை நாம் மறந்து செயற்படக் கூடாது. பொறுப்பற்றவகையில் மக்கள் செயற்படுவதால் ஏற்படக் கூடிய பாதக நிலைமைகளை எண்ணிப்பார்க்கையில் அச்சம் கொள்ளத் தோன்றுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 1110 பேர் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

கொழும்பு-12, பண்டாரநாய க்க மாவத்தையைச் சேர்ந்த 1110 பேர் கொரோனா தடுப்பு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.


242 குடும்பங்களைச் சேர்ந்த 1110 பேரே இவ்வாறு தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-2)



உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதக் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஓராண்டு நிறைவுபெற்றது. இந்த வகையில் உயிர்த்த ஞாயிறுதினக் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் ஓராண்டு நினைவு நாள் நிகழ்வு வாழைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில் அதன் தவிசாளர் திருமதி சேஸாபா ஜெயரஞ்சித் தலைமையில் நேற்று இடம்பெற்றது. மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் மீதான தாக்குதலில் 31 பேர் உயிரிழந்ததுடன் 80 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பள்ளிவாசல்களில் பிரார்த்தனை





(ஏறாவூர்)

அப்பாவி மக்களின் உயிர்களைப் பறித்தும் அங்கவீனர்களாகவும் ஆக்கிய உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று நேற்றுச் செவ்வாய்க்கிழமையுடன் ஓராண்டு நிறைவு பெற்றது. இந்நிலையில் நாடளாவிய ரீதியில் இலங்கையில் நூற்றுக்கணக்கான பள்ளிவாசல்களில் விசேட துஆ பிரார்த்தனை இடம் பெற்றது.


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 14 . 02 . 1944

ஆண்டவன் மடியில் 04 . 05 . 2019



திதி: 22.04.2020

## அமரர் கார்த்திகேசு இரத்தினசபாபதி

(ஓய்வுநிலை சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (O.A/T) கட்டடங்கள் திணைக்களம்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-9522)

அந்திரான்,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.
077 751 0965


### மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

# இலங்கையில் தேர்தலை நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று

## ஆனந்தசங்கரி எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

சர்வதேசமே தனது நிகழ்ச்சி நிரலில் இயங்கமுடியாமல் திணறிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இலங்கையில் தேர்தலை நடத்துவது மனிதாபிமானமுள்ள எந்தவொரு மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் என தமிழ் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி சுட்டிக்காட்டினார்.

"கொரோனா" நோயின் தாக்கத்தால் மக்கள் உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அவர்களுக்கான தேவைகளும் அதிகமாகவுள்ளன. அவற்றைத் தீர்த்துவைக்காமல் தேர்தலுக்கு செல்வதென்பது அவர்கள் மீது தேர்தலைத் திணிப்பதற்கு ஒப்பானதாகும்.

இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அன்றாடம் கூலி வேலைக்கு சென்று தங்களது குடும்பங்களை பாதுகாத்து வந்தவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிட்டது.

அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வழிவகைகள் பற்றி சிந்திக்காமல் தேர்தலுக்குச் செல்வதென்பது மனிதாபிமானமற்ற ஜனநாயகத்தை மீறுகின்ற செயலாகும். குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்ல "கொரோனா" நோயின் அச்சத்திலிருந்து மக்கள் முழுமையாக இன்னும் விடுபடவில்லை.

"கொரோனா" நோயின் தாக்கம் முற்று முழுதாக நீங்கிவிடும் என்பதற்கு உத்தரவாதமும் இல்லை. இவைகளைப்பற்றி சிந்தித்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிய பின்னர் தேர்தலை நடத்துவது பற்றி ஆலோசனை செய்யுமாறு' ஜனாதிபதியை தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றது.

இதற்கு முன்னர் சில விரும்பத்தகாத நெருக்கடிகள் ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் நடந்த தேர்தல்கள் அனைத்திலும், ஜனநாயகத்துக்கு எதிரானதாக விரும்பத்தகாத முடிவுகளே வெளிவந்தன. அதே போல தற்போதுள்ள சூழ்நிலையில் தேர்தல் நடந்தால் அது சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் அமையாததோடு எதிர்காலத்தில் இது ஒரு முன்னுதாரணமாகவும் அமைந்து விடும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய் பதவி வெற்றிடங்கள்

எமது வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1.தாதிய உத்தியோகத்தர்
2.தாதி பயிற்சியாளர்
3.முதியோர் பராமரிப்பாளர்
4.ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
5.ஆய்வுகூட தொழில்நுட்ப உதவியாளர் பயிலுநர்

ஆர்வமுள்ளவர்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 26.04.2020 அன்று 9.00 மணிக்கு வைத்தியசாலைக்கு சமுகம் தர முடியுமானவர்கள் சமுகம் தரவும். சமுகம் தர முடியாதவர்கள் மின் அஞ்சல் மற்றும் தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளவும்.

அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தலைவர்:
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து),
மூளாய்.

தொலைபேசி இல-021 225 0441 , 077 961 4811
(9.00am-4.30p.m)

மின் அஞ்சல் முகவரி: Moolaii@Yahoo.com

(9518)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


## இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| சந் | சூரி, புத | சுக் | ராகு |
| | இராசி பலன் | | |
| குரு, செவ் | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம். | | |
| சனி, கேது | | | |

22.04.2020
சித்திரை 09, புதன்கிழமை
சதுர்த்தசி காலை 6.49 மணிக்கு
ரேவதி பிற்பகல் 2.11 மணிவரை
சுபநேரம் 4.31-6.01 மணிவரை
இராகுகாலம் 12.01-1.31 மணிவரை
அமாவாசை விரதம்
மனிதன் முடிந்ததைச் செய்கிறான்,
கடவுள் விரும்பியதைச் செய்கிறார்.

வளவன்

**மீனம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**மேடம்** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்** உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்** செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் கூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.

**மகரம்** உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், புதிய தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**தனுசு** நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** தாழ்ந்த சுபாவமுண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, வியாபார விருத்தியுண்டு.

**துலாம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கன்னி** முக்கியமான காரியங்களை மதியத்திற்கு முன்னரே செய்து முடிப்பது நல்லது, நண்பர்களின் மனங் கோணாது நடந்து கொள்வது நல்லது.



# கொரோனாவால் புலம்பெயர் தேசங்களில் உயிரிழந்த நம் உறவுகள்





யாழினி
அல்வாய் - லண்டன்




பாலசிங்கம் சாம்பவி
நீராவியடி -பிரான்ஸ்



தில்லைநாதன் ஆனந்தவர்மன்
பூநகரி - லண்டன்




குணரட்னம் கீர்த்திகன்
கொக்குவில் - பிரான்ஸ்



சியாமளன்
யாழ்ப்பாணம் - லண்டன்






மெய்யழகன்
வல்வெட்டித்துறை -லண்டன்




அழகரத்தினம் ஜீவிதன்
மயிலிட்டி - லண்டன்






தெய்வேந்திரம் நவரத்தினம்
சங்கானை - பிரான்ஸ்



நேருகுமாரசாமி தம்பதி
வடமராட்சி வல்வெட்டித்துறை - கனடா



பத்மநாதன் செல்லத்துரை
வேலணை - பிரான்ஸ்



நாகராஜா தம்பதி
புங்குடுதீவு - கனடா




தயகுமார் மருதலிங்கம்
உரும்பிராய் - லண்டன்



வ.குணரட்ணம்
வடமராட்சி - லண்டன்





மகாதேவன்
வயாவிளான் - பிரான்ஸ்



கமலாம்பிகை
நெடுந்தீவு - பிரான்ஸ்



வேலுப்பிள்ளை சிவபாலன்
காங்கேசன்துறை - நோர்வே



விஜயானந்த்
நயினாதீவு - பிரான்ஸ்



சின்னையா அமிர்தலிங்கம்
மயிலிட்டி - லண்டன்



அனந்தன் சிதம்பரநாதன்
சாவகச்சேரி - லண்டன்

# சிறுபான்மையினர் என்று ஒதுங்கியிருக்காது நாட்டை முன்னேற்ற முயற்சிக்க வேண்டும்

## பேராயர் மல்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

இந்துக்கள், இஸ்லாமியர்கள், கத்தோலிக்க மதத்தவராகிய நாம் சிறுபான்மையினர்கள் என்று எண்ணி ஒதுங்கியிருக்காது எல்லோரும் பௌத்த மக்களோடு சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்து இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் பயணிக்க செய்ய முயற்சிக்க வேண்டும். அதன்மூலமே அனைவரதும் உரிமைகளை தக்க வைத்துக் கொள்ளக்கூடிய ஒழுங்கு முறைக்குச் செல்ல முடியும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியான நிலையில் விசேட அறிவித்தலை வெளியிட்ட போதே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் கத்தோலிக்க மக்கள் மாத்திரம் உயிரிழக்கவில்லை. அவர்களில் இந்து. பௌத்த மக்களும் உள்ளடங்குகின்றனர். நாட்டின் பொருளாதாரத்திலும் பாரிய தாக்கத்தை இந்தத் தாக்குதல் சம்பவம் செலுத்தியது. எனவே தான் எம்மால் இந்த அறிவிப்பை விடுக்க வேண்டியுள்ளது.


நாட்டில் இனங்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையிலும் பாரிய பிளவினை ஏற்படுத்தும் நோக்கில் இந்தத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு நாம் அனைவரும் ஒற்றுமையைக் கடைப்பிடித்தோம். இதனைத் தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும்.

தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் நிச்சயமாக கண்டறியப்பட வேண்டும். எதிர்காலத்தில் மீண்டும் இது போன்றதொரு தாக்குதல் மேற்கொள்ளப்படுவதற்கு வாய்ப்பளிக்க முடியாது.

ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள போதிலும் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான சூத்திரதாரிகளை கண்டறிய முடியாமல் போயுள்ளது. அவ்வாறானவர்களை இனங்காண்பது அத்தியாவசியமானதாகும். அவர்கள் யாராக இருந்தாலும் தராதரம் இன்றி தண்டனை வழங்கப்பட வேண்டும்.

தகவல்கள் கிடைக்கப் பெற்றும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தமைக்கு அரசியலில் உயர் அதிகாரத்தில் இருந்தவர்கள் முதற்கொண்டு கீழ்மட்டத்திலுள்ளவர்கள் வரை அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும். எனவே யாருடைய அழுத்தத்திற்கும் அடிபணியாது முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோருகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மகா சங்கத்தினருக்கு நன்றி கூற விரும்புகின்றேன். தாக்குதலின் போது எம்முடன் இணைந்து செயற்பட்டனர். ஏனைய மதத்



தலைவர்களும் எம்முடன் இணைந்து செயற்பட முன்வந்தனர். பாதுகாப்புதுறையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையை நினைவுபடுத்த விரும்புவதோடு அவர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றோம்.

அன்பார்ந்த சகோதர. சகோதரிகளே! இப்படியான சம்பவங்கள் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஒன்று உண்டு. இனம் மற்றும் மதம் பற்றி நிலவுகின்ற இயற்கையான வேறுபாடுகளை வேற்றுமையை விட ஒற்றுமைக்காக எம்மிடமிருக்கும் வளமாகக் கருதி ஒருவர் மற்றொருவரிடமிருந்து கற்றுக் கொண்டு நாட்டில் நன்மை கருதி எம்மை அர்ப்பணிப்பது எல்லாவற்றுக்கும் மேலானதாகும்.

இலங்கையின் பாரம்பரிய வரலாற்றுக் கலாசாரங்கள் எவை என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். சமத்துவத்தை நாம் மதிக்கின்ற போதும் எங்களுக்குரிய பொதுவான உரிமையுடன் நாம் வாழ்வதும், விசேடமாக சிறுபான்மை இனத்தவராகக் கருதப்படுபவர்கள் இதைப் பற்றி ஆழமாக சிந்திப்பது அவசியமாகும்.

பொதுவாக நிலவுகின்ற மத சிந்தனையின் அடிப்படையில் பௌத்த ஆன்மீகத்தை மையமாகக் கொண்டு இந்த நாட்டின் கலாசாரம் மற்றும் கூட்டுறவு கட்டியெழுப்பப்படுகின்றது என்பதை ஏற்றுக் கொண்டோம்.

இந்துக்கள், இஸ்லாமியர்கள், கத்தோலிக்க மதத்தவராகிய நாம் சிறுபான்மையினர்கள் என்று எண்ணி ஒதுங்கியிருக்காது எல்லோரும் பௌத்த மக்களோடு சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்து இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் பயணிக்க செய்ய முயற்சி எடுக்க வேண்டும். அதன் மூலமே அனைவரதும் உரிமைகளை தக்கவைத்துக் கொள்ளக்கூடிய ஒழுங்கு முறைக்குச் செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# 20 ஆயிரத்தைக்கடந்த பலி! மிரண்டு போன பிரான்ஸ்



(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தை கடந்தது.

உலகையே உலுக்கிவரும் கொரோனா வைரஸ் 210 நாடுகளுக்கு பரவியுள்ளது. இந்தக் கொடிய வைரஸ் 24 இலட்சத்து 73 ஆயிரத்து 536 பேருக்கு பரவியுள்ளது.

வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 16 இலட்சத்து 58 ஆயிரத்து 366 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 56 ஆயிரத்து 444 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. சீனாவில் கண்டு பிடிக்கப்பட்ட வைரஸ் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை புரட்டி எடுத்துவருகிறது.

ஐரோப்பிய நாடுகளில் இத்தாலி, ஸ்பெயினை தொடர்ந்து கொரோனா தற்போது பிரான்ஸ் நாட்டில் தீவிரமடைந்து வருகிறது. மேலும், அந்நாட்டில் வைரசுக்கு பலியானோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தை கடந்துள்ளது. பிரான்ஸ் நாட்டில் ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 383 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பரவியவர்களில் 97 ஆயிரத்து 709 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெற்றவர்களில் 37 ஆயிரத்து 409 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்து வெளியேறியுள்ளனர்.

ஆனாலும், அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் 547 பேர் பலியாகியுள்ளனர். இதனால் பிரான்ஸில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 20 ஆயிரத்து 265 ஆக அதிகரித்துள்ளது.

அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயினுக்கு அடுத்தபடியாக கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு அதிக உயிரிழப்புகளை சந்தித்த நாடுகள் பட்டியலில் பிரான்ஸ் நான்காவது இடத்தில் உள்ளதால் அந்நாட்டு மக்கள் மிகுந்த அதிர்ச்சி அடைந்துள்ளனர். (ஜ-2)

### கடும் கண்காணிப்பிற்குள் கொழும்பின் ஐந்து பகுதிகள்

(கொழும்பு)

கொழும்பு நகரம் மற்றும் சனநெரிசல் மிக்க ஐந்து பகுதிகள் கடும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பகுதிகளுக்குள் நுழைவதற்கோ, அங்கிருந்து வெளியேறுவதற்கோ முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

தெஹிவளை - அருணாலோக மாவத்தை , மருதானை - ஆர்னோல்ட் ரத்நாயக்க மாவத்தை மற்றும் குணசிங்கபுர - மிஹிது மாவத்தை உள்ளிட்ட சில பகுதிகளே இவ்வாறு கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டன.

கொழும்பு , கிராண்ட்பாஸ் - நாகலகம் வீதி தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளதுடன், கடும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



கனடாவில் உள்ள தென்மராட்சி மக்கள் அபிவிருத்தி நிறுவனம் தென்மராட்சிப் பகுதியில் மிகவும் வறுமை நிலையிலுள்ள 120 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த உலர் உணவுப் பொதிகள் தென்மராட்சி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுபச்செல்வனிடம் வழங்கிவைக்கப்பட்டன.

(படம்: கொடிகாமம் செய்தியாளர்)

# ஒரேநாளில் இரண்டாயிரம் பேர் மரணம்! உயிரிழப்புக்களால் அதிர்ந்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் ஆயிரத்து 939 பேர் உயிரிழந்தனர். இதனால் அங்கு கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 42 ஆயிரத்தை கடந்தது.

உலகம் முழுவதும் 210 நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. இந்தக் கொடிய வைரஸ் 24 இலட்சத்து 80 ஆயிரத்து 165 பேருக்கு பரவியுள்ளது.

கொரோனா பாதிக்கப்பட்டவர்களில் 16 இலட்சத்து 63 ஆயிரத்து 547 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 56 ஆயிரத்து 763 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனா பரவியவர்களில் இதுவரை 6 இலட்சத்து 46 ஆயிரத்து 248 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்து வெளியேறியுள்ளனர். ஆனாலும், இந்தக் கொடிய வைரசுக்கு உலகம் முழுவதும் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 370 பேர் பலியாகினர்.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கொரோனா ஐரோப்பிய நாடுகளைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் கோரத்தாண்டவம் ஆடி வருகிறது. வைரஸ் பரவியவர்கள், பலி எண்ணிக்கை ஆகிய இரண்டிலும் உலகளவில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் கொரோனாவுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்தை கடந்துள்ளது.

அந்நாட்டில் 7 இலட்சத்து 92 ஆயிரத்து 759 பேருக்கு வைரஸ் பரவியுள்ளது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரே நாளில் 28 ஆயிரத்து 123 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், அங்கு வைரஸ் தாக்குதலுக்கு ஒரே நாளில் ஆயிரத்து 939 பேர் பலியாகியுள்ளனர். இதனால் கொரோனாவுக்கு அமெரிக்காவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 42 ஆயிரத்து 514 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-2)

# புத்தாண்டு இராசி பலன்கள்

## 14.04.2020-13.04.2021



சார்வரி வருடத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் உச்சம் பெற்றும், தனாதிபதி புதன் நீச்சம் பெற்றும் சஞ்சரிக்கிறார்கள். பஞ்சம ஸ்தானத்தில் விரயாதிபதி சந்திரனோடு சனியும் கேதுவும் கூடியிருக்கிறார்கள். 6 இல் செவ்வாய் வக்கிரம் பெற்று குருவோடு இணைந்திருக்கிறார். குரு நீச்சம் பெற்றிருந்தாலும் சனி குரு வீட்டிலும் குரு சனி வீட்டிலும் பரிவர்த்தனை பெற்றிருக்கிறார்கள். குரு-மங்கல யோகமும் அமைந்துள்ளது. இலாப ஸ்தானத்தில் இராகுவும் தொழில் ஸ்தானத்தில் தன் சொந்த வீட்டில் சுக்கிரனும் இருந்து ஆண்டு தொடங்குவதால் இந்த ஆண்டு வளர்ச்சி அதிகரிக்கும். வசதிகள் பெருகும். வருமானம் உயரும்.

இராகு-கேது பெயர்ச்சி

1.9.2020 அன்று உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு இராகுவும் 4 ஆம் இடத்திற்கு கேதுவும் பெயர்ச்சியாகிறார்கள். இது உங்களுக்கு ஒரு பொற்காலமாக அமையும். தொழில் தொடங்கும் முயற்சியில் இருந்த தடைகள் அகலும். வங்கிகளின் ஒத்துழைப்பு உண்டு. மக்கள் செல்வாக்கு மேலோங்கும். அரசு வழி ஆதரவு கிடைக்கும். திசா புத்தி பலம் பெற்றவர்கள் தனித்து இயங்கும் வாய்ப்பை வரவழைத்துக் கொள்வர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தாமதப்பட்ட பதவி உயர்வு தடையின்றி கிடைக்கும். பணி நிரந்தரம் ஆகாதவர்களுக்கு அதுபற்றிய தகவல் வரலாம்.

குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று மகர இராசிக்கு குரு பெயர்ச்சியாகி செல்கிறார். அது குருபகவானுக்கு நீச்ச வீடாகும். அது ஒரு வகைக்கு நன்மைதான். இக்காலத்தில் இராஜாங்க ஆதரவும் இராஜயோக வாழ்க்கையும் வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவாகும். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படும். குலதெய்வ பிரார்த்தனைகளை முறையாக நிறைவேற்றுவீர்கள். நிலையான வருமானம் வரும். பயணங்கள் அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. புதிய வாகனம் வாங்குவீர்கள்.

சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று வாக்கிய பஞ்சாங்க ரீதியாக சனி பகவான், மகர இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கிறார். திட்டமிடாது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். பணத்தட்டுப்பாடு அகலும். நேர்முகத் தேர்வில் வேலை கிடைக்கும். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்வர். இதுவரை மனம் மாறாமல் இருந்த மேலதிகாரிகள் இப்பொ




முது உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர்.

குரு வக்கிரமும் அதிசாரமும்

13.5.2020 முதல் 7.7.2020 வரை மகர இராசியில் குருபகவான் அதிசாரமாகி வக்கிரம் பெறுகிறார். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியில் குரு வக்கிர கதியில் இருக்கின்றார். இக்காலத்தில் சனி பகவானும் குருவோடு இணைந்து வக்கிர கதியிலேயே தனுசு இராசிக்குள் உலா வருகிறார். மீண்டும் குருபகவான் 6.4.2021 இல் கும்ப இராசிக்கு குரு அதிசாரமாகச் செல்கிறார். இந்த வக்கிர இயக்க காலத்தில் நன்மையும் தீமையும் கலந்தே பலன்கள் நடைபெறும். அஷ்டமாதிபதியாக மட்டுமல்லாமல் பஞ்சமாதிபதியாகவும் குரு விளங்குவதால் பிள்ளைகள் வழியில் பெரும் விரயம் ஏற்படலாம். பிறருக்குப் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் வரலாம்.

வழிபாடு

தேய்பிறை அஷ்டமி திதியில் வைரவர் வழிபாட்டை மேற்கொண்டால், தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இந்தப் புத்தாண்டுத் தொடக்கத்தில் புதிய பாதையை அமைத்துக் கொடுக்கும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். பெற்றோர்களின் ஆதரவு திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளிடம் நல்ல பெயர் கிடைக்கும். திறமையைப் பார்த்து பதவி உயர்வு தானாக வந்து சேரும். ஒரு சிலர் சுயதொழில் செய்ய முன்வருவர்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சார்வரி வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசியை குரு பகவான் பார்க்கிறார். இராசிநாதன் புதன் நீச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரிக்கிறார். 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 9 ஆம் இடத்திலேயே தன் சொந்த வீட்டில் இருக்கிறார். 10 இல் இராகுவும் 4 இல் கேதுவும் உலா வருகிறார்கள். பஞ்சம ஸ்தானத்தில் குரு நீச்சம் பெற்று செவ்வாயோடு இணைந்து குரு-மங்கலயோகத்தை உருவாக்குகிறார். குரு, சனி பரிவர்த்தனை யோடும் குரு-மங்கல யோகத் தோடும் விரயாதிபதி சூரியன் அஷ்டமத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் அமைப்போடும் சுக்கிர பலத்தோடும் இந்த ஆண்டு தொடங்குவதால் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் அதிகம் வரப்போகிறது.

இராகு- கேது பெயர்ச்சி

1.9.2020 அன்று உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திற்கு இராகுவும் 3 ஆம் இடத்திற்கு கேதுவும் பெயர்ச்சியாகிறார்கள். இந்தக் கால கட்டத்தில் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். உடன்பிறப்புகள் உங்கள் கடன்சுமை குறைய வழி வகுத்துக் கொடுப்பர். போட்டிக் கடை வைத்தோர் விலகுவர். புகழ்மிக்கவர்களின் நட்பு கிடைக்கும். பணியாளர்கள் பக்கபலமாக இருப்பார்கள். புதிய சொத்துகளை வாங்கும் எண்ணம் உருவாகும்.

குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று குரு பகவான், மகர இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இது குரு பகவானுக்கு நீச்ச வீடாகும். குரு பகவான் நீச்சம் பெற்று சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும் குரு, சனி பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கும் காலங்களில் நன்மைகளை செய்வார். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். பணப் புழக்கம் அதிகரிக்கும். தனித்து இயங்கும் ஆற்றல் உருவாகும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். தொழிலில் எதிர்பார்த்த அளவிற்கு இலாபம் கிடைக்கும்.

சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று வாக்கிய பஞ்சாங்க ரீதியாக சனிபகவான், மகரத்திற்கு பெயர்ச்சியாகிறார். எனவே மனக் குழப்பங்கள் அகலும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். தாராளமாக செலவிடும் வாய்ப்பு கைகூடும். பெரிய பொறுப்புகள்




மற்றும் பதவிகளிலிருந்து விலகிய வர்களுக்கு மீண்டும் அதில் சேரக் கூடிய வாய்ப்பு கைகூடும். திருமணத் தடை அகலும். அர்த்தாஷ்டமச் சனி விலகும் நேரத்தில் சனிக்குரிய ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

குரு வக்கிரமும் அதிசாரமும்

குரு வக்கிரமும் அதிசாரமும் 13.5.2020 முதல் 7.7.2020 வரை குருபகவான் அதிசாரமாகவும் வக்கிரமாகவும் சஞ்சரிக்கிறார். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியில் குரு வக்கிர இயககத்தில் இருக்கிறார். அதே நேரத்தில் சனியும் வக்கிர கதியில் அவரோடு இணைந்து சஞ்சரிக்கிறார். மீண்டும் குருபகவான் 6.4.2021 இல் கும்ப இராசிக்கு அதிசாரமாக செல்கிறார்.

இதன் விளைவாக ஓரளவு நற்பலன்கள் நடைபெறும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் என்பதால் வக்கிர காலத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். தாயின் உடல் நலம் சீராகும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.

வழிபாடு

திருவோண நட்சத்திரமன்று விரதமிருந்து திருமாலை வழிபாடு செய்தால் வாழ்க்கை வளமாகும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இந்த புத்தாண்டில் குரு பார்வை இருப்பதால், மகிழ்ச்சியான சம்பவங்கள் நிறைய நடைபெறும். ஆரோக்கிய பாதிப்புகளில் இருந்து விடுபடுவீர்கள். அருகில் இருப்புவர்களின் ஆதரவு கூடுதலாக கிடைக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

கணவன் - மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு அகலும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பெற்றோர்களின் உடல் நலத்தில் கவனம் தேவை.

(தொடரும்)

# ஆட்டோ - மோ.சைக்கிள் விபத்து சாரதி சம்பவ இடத்தில் உயிரிழப்பு



(நாவலப்பிட்டிய)

**கினிகத்தேன-கம்பளை** பிரதான வீதியின் நாவலப்பிட்டிய முதலாவது புகையிரதக் கடவைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பரிதாபமாகப் பலியானார்.

ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் ஆட்டோ சாரதியே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பள்ளிவாசல்களைத் திறக்க வேண்டாம்

(கொழும்பு)

பள்ளிவாசல்களைத் திறக்க வேண்டாம் என வக்பு சபை ஆலோசனை வழங்கியது.

கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதியன்று இலங்கை வக்பு சபையால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் ரமழான் மாதம் முழுவதற்கும் அல்லது மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும்.

எனவே எந்தப் பொதுமக்களுக்காகவும் பள்ளிவாசல்களைத் திறக்க வேண்டாம். ஜும்ஆ தொழுகை, ஐவேளை தொழுகை, தராவீஹ் தொழுகை உட்பட எதுவிதமான கூட்டுத் தொழுகைகளையும் நடத்த வேண்டாம்.

இஃப்தார் நிகழ்ச்சி போன்ற எதுவித ஒன்றுகூடல்களையும் நடத்த வேண்டாம் என்றும் மஸ்ஜித்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசலின் உள்ளோ அல்லது வளாகத்தின் உள்ளோ, கஞ்சி காய்ச்சவோ அல்லது கஞ்சி பகிர்ந்தளிக்கவோ வேண்டாம் என்றும் வக்பு சபை கோரிக்கை விடுத்தது. பள்ளி ஜமாத் அங்கத்தவர்களுக்கும் இந்தப் பணிப்புரைகள் பற்றி முறைப்படி அறிவிக்குமாறும் இலங்கை வக்பு சபை அனைத்து பள்ளிவாசல் நிர்வாகிகளையும் கேட்டுக்கொண்டது. (இ-7)

# சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு மேலும் 32 மில்லியன் ரூபாய் அன்பளிப்பு

## கொவிட்-19; வைப்பு மீதி 769 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

நிறுவன மற்றும் தனிப்பட்ட அன்பளிப்புக்கள் மற்றும் நேரடி வைப்புக்களுடன் கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 769 மில்லியன் ரூபாயாக அதிகரித்தது.

சிங்கப்பூர் தலைமை சங்கநாயக்கர் சங்கைக்குரிய பெல்லன்வில தம்மரத்ன தேரர் 5 மில்லியன் ரூபாவும் வட அமெரிக்காவின் தலைமை சங்கநாயக்கர் சங்கைக்குரிய மஹரகம தம்மசிறி தேரர் 5 மில்லியன் ரூபாவும் பிரான்ஸின் தலைமை சங்கநாயக்க தேரர் சங்கைக்குரிய பரவாஹெர சந்திரரத்ன தேரர் ஒரு மில்லியன் ரூபாவும் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா சர்வதேச பௌத்த விகாராதிபதி கலாநிதி சங்கைக்குரிய தவளம தம்மிக தேரர் மற்றும் சங்கைக்குரிய ஹல்விடிகல சுஜாத தேரர் ஒரு மில்லியன் ரூபாவும் கல்கிஸ்ஸை பௌத்த நிலையத்தின் தலைவர் கலாநிதி சங்கைக்குரிய திவியகஹ யஸஸ்ஸி தேரர் ஒரு மில்லியன் ரூபாவும் இத்தாலியின் சிரென்சி சமாதி விஹாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய தொம்பதெனியே நந்தசிறி தேரரால் 2 இலட்சம் ரூபாவும் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

சீ.ஜே.விக்கிரமரத்ன 05 மில்லியன் ரூபாவும் மெரைன் வன் தனியார் நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவும் மரீனா பூட்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் இலங்கை இருதய சங்கம் தலா 5 மில்லியன் ரூபாவும் வீதிப் போக்குவரத்து அதிகார சபை 5 இலட்சம் ரூபாவும் ஏ.அமரசிங்க ஒரு இலட்சம் ரூபாவும் பீ.டீ. தர்மவர்தனவால் ஐம்பதாயிரம் ரூபாவும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் 85737373 என்ற இலக்கத்தையுடைய கொவிட்-19 சுகாதார, சமூகபாதுகாப்பு நிதியத்திற்கு உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொருவருக்கும் அன்பளிப்புக்களை அல்லது நேரடி வைப்புக்களை செய்ய முடியும். சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்திற்கு செய்யப்படும் அன்பளிப்புக்கள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்ட திட்டங்களிலிருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகிராப் ஊடாக நிதியை வைப்பிலிட முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு பிரதிப் பணிப்பாளர் மொஹான் கருணாரத்ன தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி மாளிகையில் ஒருவருக்கு கொரோனா 125 குடும்பங்களைத் தனிமைப்படுத்த உத்தரவு

(டில்லி)

டில்லியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின.

இதனையடுத்து ஜனாதிபதி மாளிகையில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பில் உள்ளவர்கள் என 125 குடும்பங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அந்நாட்டு சுகாதாரத்துறை நேற்றுத் தெரிவித்தது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2017

**மஞ்சுளா**




**பரந்தாமன்**




**வாணி**




**கனகா**




**ரவீந்திரன்**




**கௌதம்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கிராம உத்தியோகத்தர்களுக்கு இடர்கால கொடுப்பனவை வழங்குங்கள்

## முன்னாள் எம்.பி. சிறீதரன் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிராம உத்தியோகத்தர்களுக்கான இடர்கால கொடுப்பனவை வழங்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் வட மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தற்போது நாட்டில் நிலவிவரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பேரிடர் காரணமாக ஒட்டுமொத்த நாடும் அதன் அரச, அரச சார்பற்ற கட்டமைப்புக்களும் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில் மக்கள் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் கிராம உத்தியோகத்தர்கள் பாரிய இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் மிகக் கூடியளவு சேவைப் பரப்பையும் அதிகூடியளவான குடும்பங்களையும் கொண்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கு முதியோர் கொடுப்பனவு, வறியவர்களுக்கான கொடுப்பனவு, சமுர்த்தி மாதாந்த கொடுப்பனவு என்பவற்றோடு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு வரும் உலருணவு நிவாரணப் பொதிகளையும் மிக நீண்ட தூரம் தமது சொந்த வாகனங்களில் பயணம் செய்து வீடுவீடாக கொண்டு சென்று விநியோகிக்கும் பணியை கிராம உத்தியோகத்தர் முன்னெடுத்து வருகின்றார்கள்.

உயிராபத்து நிறைந்ததோர் இடர்காலச் சூழலில் கடந்த ஒரு மாத காலமாக ஓய்வின்றி தமது குடும்பம், குழந்தைகள் என அனைத்தையும் துறந்து தன்னலமற்ற மக்கள் பணியாற்றி வரும் இவர்களுக்கு இன்றளவும் அரசாங்கத்தினால் விசேட கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்பட வில்லை. இது தொடர்பில் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக நிதி ஒதுக்கீடுகள் எவையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிய முடியவில்லை.

இதனால் பொருளாதார ரீதியாக பல நெருக்கீடுகளை எதிர்கொண்டுள்ள இவர்கள் தமது கடமையை முழுமனதோடு செய்ய முடியாது பல்வேறுபட்ட மன அழுத்தங்களுடன் தொடர்ச்சியாக கடமையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது.


எனவே ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது சேவைப்பரப்பின் அடிப்படையில் விசேட கொடுப்பனவொன்றை பெற்றுக்கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (9)






நாடு முழுவதும் ஊரடங்குச்சட்டம் அமுலாகியிருந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவநகர் மூத்தோர் சங்க அங்கத்தவர்களின் நலன்கருதி புலம்பெயர் தேசத்தில் வசித்து வரும் இராசலிங்கம் புஸ்பராசாவினால் மூத்தோர் சங்க சிவநகர் கிராம அங்கத்தவர்கள் 72 பேருக்கும் கடந்த திங்கட்கிழமை நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.
(படம்: சிவநகர் செய்தியாளர்)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி




உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் மரணித்தவர்களின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நாடுமுழுவதும் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அந்த வகையில் வடக்கிலுள்ள 5 மாவட்டங்களிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் ஆலய நிர்வாகத்தினரும் இணைந்து பிரார்த்தனையில் ஈடுபட்டனர் அத்துடன் வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பிரார்த்தனை இடம்பெற்றது. வவுனியா மாவட்ட செயலகத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் அனைத்து பள்ளிவாசல்களிலும் பிரார்த்தனைகள் மேற்கொள்ளுமாறு கூறப்பட்டதன் அடிப்படையில் வவுனியா நகர பள்ளிவாசல், மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசல் முல்லைத்தீவு நகர் பகுதியில் அமைந்திருக்கின்ற முல்லைத்தீவு மஹ்ஃப் மஹ்பூப் சுப்ஹானி பள்ளிவாசலில் விசேட "துஆ" பிரார்த்தனைகள் இடம் பெற்றன.

அத்துடன் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்தனை இடம் பெற்றது. (9-250-281-285-299)

# உலர் உணவு பொதிகள் வழங்கல்




(பனிக்கன்குளம்)

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் மற்றும் மன்னார் சமூக,பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமும் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கொக்குத்தொடுவாய்,கொக்கிளாய் மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் வசிக்கும் 60 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் 100 பெண்களுக்கான சுகாதார பொருட்களும் வழங்கி வைத்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவில் 30 குடும்பங்களுக்கும் , கருநாட்டுக்கேணி கிராம அலுவலர் பிரிவில் 10 குடும்பங்களுக்கும், கொக்கிளாய் கிராம அலுவலர் பிரிவில் 20 குடும்பங்களுக்குமாக மொத்தமாக 60 குடும்பங்களுக்கு இந்த இடர்கால நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (9-281)




(பனிக்கன்குளம்)

கொரோனா நோய்த் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளிலிருந்து தாயக மக்களை மீட்டெடுக்கும் வகையில் கனடா டொரொன்டோவில் இயங்கும் SMART TELECOM நிறுவனத்தின் SMART WORLD FOUNDATION அமைப்பின் உரிமையாளர் சேகர் ஏகாம்பரநாதன் முல்லைத்தீவிலுள்ள 120 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளாந்த கூலி தொழிலை நம்பி வாழ்கின்ற கரிப்பட்டமுறிப்பு, இந்தபுரம், குமாரபுரம், கோயில் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, கோம்பாவில்,வண்ணாங்குளம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மொத்தமாக 120 குடும்பங்களுக்கான உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (9-281)

# எமது வளங்களை பயன்படுத்தி வளமான எதிர்காலத்தை அமைப்போம்

## சிவசக்தி ஆனந்தன்

(நெளுக்குளம்)

தாயகத்தில் தனித்துவமாக உள்ள வளங்களை பயன்படுத்தி எமக்கான வளமான எதிர்காலத்தினை அமைத்துக்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டுமென தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,கொரோனா வைரஸ் பரவலின் தாக்கம் உலகளாவிய ரீதியில் தீவிரமாகியுள்ள நிலையில் அதன் பாதிப்புக்கள் இலங்கையிலும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தாயக பூமியில் காடுகள், நீர்நிலைகள் உள்ளிட்ட வளங்கள் நிறைந்தவையாக இருக்கின்றன. இதனை நாம் அனைவரும் முதலில் மனதில் திடமாக நிறுத்திக்கொள்வதோடு உடனடியாக எமது வளங்களை மையப்படுத்தி எதிர்காலத்தினை திட்டமிட வேண்டிய கடப்பாட்டிற்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

விசேடமாக, நெல் உற்பத்தி, மரக்கறி உற்பத்தி, நன்னீர், கடல் நீர் மீன்பிடி ஆகியவற்றை ஊக்குவிப்பது இன்றியமையாததாகின்றது.

அதுமட்டுமன்றி, அனைத்து தரப்பினரும் தமது வீடுகளில் வீட்டுத்தோட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமானதொரு செயற்பாடாகின்றது.

ஆகவே எமது மண்ணில் உள்ள வளங்களை சரியாக புரிந்து முறையாக பகிர்ந்து செயற்படுவதன் ஊடாக நாம் ஆட்சியாளர்களிடமோ, பிற தரப்பினர்களிடமோ தங்கி வாழும் சூழலிலிருந்து முற்றாக விடுபடுவதற்கான வழியை ஏற்படுத்தும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்

10

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



முன்னதாக திருத்தங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஆறுபேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு கூடி அதுபற்றி ஆராய்ந்திருந்தது. குறித்த இரண்டு விடயங்கள் தவிர்ந்த ஏனைய திருத்தங்களுக்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இதேவேளை, இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின் பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்கெடுப்பு முடிவடையும்வரை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் தங்கியிருந்து இழுபறிக்குக் காரணமாகவிருந்த திருத்தங்கள் தொடர்பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டதாக அறிய வருகிறது.

இழுபறிக்குக் காரணமாகவிருந்த இரு திருத்தங்கள் தொடர்பிலும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக உருவாக்கப்படும் அரசியலமைப்பு சபைக்கு பத்து உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். இதில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஜனாதிபதியின் பிரதிநிதி ஆகியோர் அடங்குவதோடு பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து ஏனைய கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் இணக்கப்பாட்டுடன் சுயாதீன நபர்கள் ஐவரை நியமிப்பதற்கு ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் அதிகாரத்தை பாராளுமன்றத்துக்கு வழங்காமல் வெளிநபர்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த எதிர்த்தரப்பினர், இதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிக்க வேண்டும் என வலியுறுத்தினர். ஆனால், சுயாதீனமான வெளிநபர்களே இதற்கு நியமிக்கப்பட வேண்டும் எனவும் அரசியல்வாதிகளை நியமிப்பதானது மீண்டும் அதனை அரசியல்மயமாக்கிவிடும் என அரச தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

பேச்சுவார்த்தைகளையடுத்து அரசியலமைப்பு சபைக்கு நியமிக்கும் 10 பேரில் ஏழு பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் மூவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் அற்ற சுயாதீனமான நபர்களாகவும் அமையும் வகையில் திருத்தம் செய்ய உடன்பாடு எட்டப்பட்டது.

இதேவேளை, பிரதமரின் ஆலோசனையுடன் அமைச்சர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற திருத்தத்திற்கும் எதிர்த்தரப்பு கடுமையான ஆட்சேபனையை தெரிவித்திருந்தது. ஆனால் அந்தத் திருத்தம் சிறிய மாற்றத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குழுநிலை சந்தர்ப்பத்தில் எதிர்த்தரப்பினால் முன்வைக்கப்பட்ட அநேக திருத்தங்களுக்கு உடன்பாடு காணப்பட்டது. சுயாதீன ஆணைக்குழுக்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என திஸ்ஸ விதாரண எம்.பி.கொண்டுவந்த திருத்தத்துக்கு ஆளும் தரப்பு முதலில் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் இறுதியில் தேர்தல் ஆணைக்குழு தவிர ஏனைய ஆணைக் குழுக்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என திருத்தம் செய்ய இணக்கம் காணப்பட்டது.

தேசிய அரசாங்கம் உருவாகும் பட்சத்தில் அமைச்சர்களின் தொகையை அதிகரிக்கும் திருத்தத்துக்கு எதிர்த்தரப்பு ஆட்சேபனை தெரிவித்தபோதும் இறுதியில் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திருத்தத்துக்கு உடன்பாடு எட்டப்பட்டது.

19 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு அமைய தகவல் அறியும் உரிமை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 வருடங்களிலிருந்து 5 வருடங்களாகக் குறைக்கப்படுகிறது. ஜனாதிபதி பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவராவார், ஜனாதிபதி சட்டத்துக்கு கட்டுப்பட்டவராக இருப்பார், பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 6 வருடங்களிலிருந்து 5 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

4 1/2 வருடங்களின் பின்னரே பாராளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியும், அவசர சட்டங்கள் கொண்டுவரப்படுவது நீக்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டங்களுக்கு அமைய செயற்படாத தனியார் ஊடகங்களுக்கு தண்டனை வழங்குவது தொடர்பான சரத்து நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அரசியலமைப்பின 19 ஆம் திருத்தத்தின் மூலம் தகவலைப் பெற அணுகுவதற்கான உரிமை.- அரசியலமைப்பின் உறுப்புரை 14அ.

19 ஆம் திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 14 ஆம் உறுப்புரையினை உடனடுத்துப் பின்வரும் புதிய உறுப்புரை 14அ ஆக உட்புகுத்தப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது.

14அ. (1) ஒவ்வொரு பிரஜையும் பிரஜையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதும் பின்வருபவர்களினால் வைத்திருக்கப்படுவதுமான தகவலாகவுள்ளதுமான ஏதேனும் தகவலை, சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக பெற அணுகுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்டக்குழு;

(ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது ஏதேனும் திணைக்களம் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டக்குழு;

(இ) ஏதேனும் உள்ளூரதிகாரசபை; அத்துடன்

(ஈ) இப்பந்தியின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடைமையில் வைத்திருக்கின்ற வேறு எவரேனும் ஆள் , மேற்கூறப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து தகவலைப் பெறமுடியும்.

14அ. (2) ல் கூறப்படடுள்ளதாவது - ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுப்பதற்காக, ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாப்பதற்காக, மற்றவர்களின் நற்கீர்த்தியை அல்லது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அல்லது அந்தரங்க தன்மையினைப் பாதுகாப்பதற்காக, நீதிமன்ற அவதூறைத் தடுப்பதற்காக அல்லது பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாப்பதற்காக, நம்பகத்தன்மையில் தெரிவிக்கப்பட்ட தகவலின் வெளிப்படுத்துகையைத் தடுப்பதற்காக அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச் சார்பற்ற தன்மையையும் பேணுவதற்காக மற்றும் தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு நலன் கருதி சனநாயக சமூகமொன்றில் அவசியமாகக் கூடியவாறாக சட்டத்தினால் விதித்துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த மட்டுப்பாடுகள் எதுவும், இவ்வுறுப்புரையினால் பிரகடனம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும் உரிமை மீது இடப்படுதல் ஆகாது. இதன் பிரகாரம் ஒவ்வொரு பிரஜையும் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த மற்றைய சந்தர்ப்பங்களில் எந்தவொரு தகவல்களையும் பெற முடியும்.

அரசியலமைப்பு உறுப்புரை 14அ ஆனது தகவலைப் பெற அணுகுதலுக்கான உரிமையை உத்தரவாதம் செய்வதுடன், தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்குப் பயன்கொடுப்பதன் மூலம் பகிரங்க அதிகார சபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் பண்பாட்டைப் பேணி வளர்த்து அதன் மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்து நிற்றல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துதல் ஊடாக முழுமையாகப் பங்கேற்கக் கூடியதும் நாட்டின் பொதுவாழ்வில் தீவிரமாகப் பங்கேற்கக் கூடியதுமாகவிருக்கும் ஒரு தேவைப்பாட்டை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்

இச் சட்டம் தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்கு ஏற்பாடு செய்வதற்கும் அணுக்கம்; மறுக்கப்படக்கூடிய ஏதுக்களைக் குறித்துரைப்பதற்கும்; தகவலுக்கான உரிமை ஆணைக் குழுவினைத் தாபிப்பதற்கும்; தகவல் அலுவலர்களின் நியமனத்திற்கும்; தகவலைப் பெறுவதற்கான நடவடிக்கை முறைகளைத் தருவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கும் வழிவகுக்கின்றது.

**19 ஆம் திருத்தத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது.**

இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, பிரஜை ஒவ்வொருவரும், ஒரு பகிரங்க அதிகாரசபையின் உடைமையின் கட்டுக்கோப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தின் தத்துவங்கள், சிறப்புரிமைகள் மற்றும் செயன்முறைகளை மதிப்புக் குறைப்பனவாக இருத்தலாகாது.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு- தகவலைப்பெற அணுகுதலுக்கான மறுப்பு

சட்டத்தின் பிரிவு 5(1) அ

தகவலானது, பாரிய பகிரங்க அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை நீதிமுறைப்படுத்தினாலொழிய அல்லது சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தாலொழிய, ஏதேனும் பகிரங்க தொழிற்பாடு அல்லது அக்கறைக்கு தொடர்பல்லாததாகவுள்ள அல்லது தனியாளின் அந்தரங்கத் தன்மையின் அனுமதிக்கப்படாத வரம்பு மீறலைச் செய்யக்கூடிய தனிப்பட்ட தகவலின் வெளிவிடுகையுடன் தொடர்புறுகின்றவிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) ஆ

அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது - (i) அரசின் பாதுகாப்பை அல்லது அதன் ஆள்புல இறைமையை அல்லது தேசிய பந்தோபஸ்தை பாதிக்கக் கூடியதாக இருக்குமிடத்து; (ii) அத்தகைய தகவல் இரகசியமாகத் தரப்பட்டு அல்லது அதிலிருந்து பெறப்பட்டு உள்ளவிடத்து. ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேச சட்டத்தின்கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூரமாக பாதகமாகவிருக்குமிடத்து அல்லது அவ்வாறிருக்கும் சாத்தியமுள்ளவிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

**தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படும் சந்தர்ப்பங்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது.**

சட்டத்தின் பிரிவு 5(1) இ

அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது, (i) நாணயமாற்று விகிதங்கள் அல்லது கரைகடந்த நாணயமாற்றுக் கொடுக்கல்-வாங்கல்களின் கட்டுப்பாடு; (ii) வங்கித் தொழில் அல்லது கொடுகடன் ஒழுங்குபடுத்துகை; (iii) வரிவிதிப்பு; (iv) பண்டங்கள் சேவைகளின் விலைகளதும், வாடகைகளதும் வேறு செலவுகளதும் அத்துடன் கூலிகள், சம்பளங்கள் மற்றும் வேறு வருமானங்களின் ஸ்திரத்தன்மை, கட்டுப்பாடு மற்றும் சீர்படுத்துகை; அல்லது (v) கரைகடந்த வியாபார உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல் தொடர்பிலான அரசாங்க அல்லது நிதிசார் கொள்கைகளை மாற்றுவதற்கான அல்லது தொடர்வதற்கான காலத்திற்கு முந்தியதான முடிபுகளை வெளியிடுவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரதூரமான பங்கத்தை விளைவிக்குமிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) ஈ

பாரிய பொதுமக்கள் அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை அனுமதிக்கின்றதென பகிரங்க அதிகாரசபை திருப்திப்பட்டாலொழிய, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் வர்த்தக அந்தரங்கம், வியாபார இரகசியம் அல்லது புலமைச் சொத்து உட்பட தகவலின் வெளிவிடுகையானது மூன்றாம் திறத்தவரொருவரின் போட்டி நிலைக்குத் தீங்கு விளைவிக்குமாக உள்ளவிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 5(1) உ

தகவலானது, எவரேனும் ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தாலொழிய, அத்தகைய ஆள் தொடர்பான எவையேனும் மருத்துவப் பதிவேடுகளின் வெளிவிடுகைக்கு இட்டுச் செல்லக் கூடியவிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டும்.

# கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு மத்தியில் தேர்தலை நடத்துவது அரசின் நோக்கமல்ல

## ரோஹித சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு மத்தியில் பொதுத்தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் நோக்கமல்ல. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வை கண்டு மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பியதன் பின்னரே பொதுத்தேர்தல் இடம் பெறும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரது கருத்துக்கள் அனைத்தும் தேர்தலை இலக்காகக் கொண்டதாக காணப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து மக்களை பாதுகாத்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது.

ஊரடங்குச் சட்டம் பகுதியளவில் தளர்த்தப்பட்டதை எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் காரணம் காட்டி தொடர்ந்து ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த முடியாது.

அவ்வாறு இடம் பெற்றால் அது எதிர்காலத்தில் மாறுபட்ட பிரச்சினைகளை தோற்றுவிக்கும்.

சாதாரண மக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டே ஊரடங்குச் சட்டம் பகுதியளவில் நீக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலை நடத்துவதற்கான திகதி ஒதுக்கப்பட்டு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலே தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

ஆகவே கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் கூட்ட முடியாது.

கொரோனா வைரஸ் பரவல் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் பின்னர் பொதுத்தேர்தல் பாதுகாப்பான முறையில் இடம் பெறும்.

அதற்கான பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவிற்கே காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# 890 மில்லியன் ரூபாய் செலவில் களுத்துறையில் செயற்கைக் கடற்கரை

(களுத்துறை)

களுத்துறை - கெலிடோ கடற்கரை மற்றும் கல்கிஸை கடற்கரைக்கு இடைப்பட்ட கரையோரப் பிரதேசத்தில் செயற்கைக் கடற்கரையை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.



இந்நிலையில் இந்த செயற்கை கரையோர அமைப்பு ஊடாக சூழல் சார் பிரச்சினைகள் ஏற்படலாம் என பிரதேச மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.


இவ்வாறான பின்னணியில் குறித்த திட்டம் அமுல் செய்யப்படும் பகுதிகளில் கடும் பாதுகாப்பு அமுல் செய்யப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு நிறுவனம் ஒன்று உள்நாட்டு நிறுவனம் ஒன்றுடன் இணைந்து இந் நடவடிக்கைகளை தொடர்வதாக அறிய முடிகின்றது.


இந்த செயற்கைக் கடற்கரைத் திட்டம் தொடர்பில் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், இந்தத் திட்டம் நிறைவடைந்ததும் பிரதேசத்தின் மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை சார் நடவடிக்கைகள் விருத்தி அடையும் எனவும் கரையோர பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்தது.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக 2 கிலோ மீற்றர்கள் நீளம் மற்றும் 25 மீற்றர்கள் அகலம் கொண்ட செயற்கைக் கடற்கரை உருவாக்கப்படவுள்ளதுடன் இதற்காக 3 இலட்சம் கன மீற்றர் மணல் பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்காக சுமார் 890 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பிரபாத் சந்ரகீர்த்தி தெரிவித்தார். (ஜ)

# இதயத்தின் இயக்கத்தைச் சீராக்குவதற்கு இலங்கை மாணவன் தயாரித்த இயந்திரம்





(கொழும்பு)

கொழும்பு மருத்துவ பீடத்தின் இறுதி ஆண்டு மாணவரான தில்ஷன் அபேவர்தன, சிபிஆர் இயந்திரத்தை உருவாக்கினார்.

கொரோனா தொற்று ஏற்பட்ட நபரின் இதய இயக்கத்தை சீராக்க இந்த இயந்திரம் பயன்படும்.

இந்த மருத்துவ சாதனத்தை சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று முன்தினம் சுகாதார அமைச்சில் பார்வையிட்டார். (ஜ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பணமும் குணமும்!

இந்த உலகத்தில் பணம் பெரிதா? குணம் பெரிதா? என்று ஒரு கேள்வி கேட்டால் உடனே எல்லோரும் சொல்கிற பதில் என்ன தெரியுமா? "பணம் என்ன சேர் பணம்... அது இன்றைக்கு வரும் நாளைக்குப் போகும். குணம் தான் சேர் பெரிது!" என்பார்கள்.

இப்படிப் பேசுவதால் நாம் மிகப் பெரிய தவறு செய்கிறோம். அதாவது பணத்தையும் குணத்தையும் சம்பந்தப்படுத்துவதே ஒரு பெரிய தவறு! ஏனென்றால் குணம் என்பது நமக்கு உள்ளே இருக்கிற ஒரு விடயம். பணம் என்பது நம் உடம்புக்கு வெளியே இருக்கிற ஒரு விடயம்.

பணம் என்பது ஏதோ நமக்கு வேண்டாத ஒன்று என்கிற மாதிரி சிலபேர் தத்துவம் பேசுவார்கள். செல்வமே பாவம் என்றும் சிலபேர் சொல்லுவார்கள். இதெல்லாம் அர்த்தமில்லாத ஒரு தத்துவம் என்கிறார் ஒரு பெரியவர். இந்த உலகத்திலே நாம் நல்லபடியாக வாழவேண்டும் என்றால் அதற்கு முக்கியமாகப் பணம் தேவை.

"பணத்தின்மேல் ஆசை வைக்காதீர்கள்.. எளிய வாழ்க்கை வாழுங்கள். அதுதான் உன்னதமான வாழ்க்கை!" என்று சொல்லி சில பேர் வறுமையை உன்னதப்படுத்தி விடுகிறார்கள். அது மிகத் தவறான ஒரு தத்துவம்.

"முறையான வழியிலே பணத்தைச் சம்பாதியுங்கள், செல்வத்தைச் சேருங்கள், நீங்களும் செழிப்பாக வாழுங்கள். இந்த நாட்டையும் செழிப்பானதாக ஆக்குங்கள்!" என்று சொல்வது தான் நியாயம். அதைவிட்டுவிட்டு மிகச் சுலபமான வழியாக வறுமையை உன்னதப்படுத்தி விடுகிறோம். அது மிகவும் தவறு!

வறுமையையே மிகப் பெருமையாக சொல்கிற பழக்கமும் நம்மிடம் உள்ளது. "சேர் இன்னமும் குடிசை வீட்டில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்!" மிகப் பெருமையாக. ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கையை எப்பவும் உற்சாகமாக வைக்க வேண்டும். அதற்குத் தேவையான செல்வத்தைத் திரட்ட வேண்டும். அதைவிட்டுவிட்டு எளிமையாக இருங்கள் என்று சொல்லி வறுமையை ஒரு பெருமையான விடயமாக நமக்கு வழிகாட்டுவது மிகவும் வேதனையான விடயம். வறுமையை உன்னதம் ஆக்குகிறவர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா?

செல்வத்தையும் செல்வம் சேர்ப்பதற்கு உழைப்பதையும் அது என்னமோ ஒரு பெரிய பாவகாரியம் மாதிரி பேசுகிறார்கள். அதைக்கேட்கும் போது நமக்கு என்ன தோன்றுகிறது?

செல்வம் பாவத்தினுடைய விளைவு போல இருக்கிறது என்று நினைக்க ஆரம்பித்து விடுகிறோம். பசியுடன் இருக்கும் ஒருவன் அடுத்த வேளை உணவைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டிருப்பான். இப்போது நாம் சாப்பிடுவதற்கு வழி என்ன என்பதில்தான் அவனுடைய மனமும் ஆன்மாவும் இருக்கும்.

உடம்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய அளவுக்கு செல்வத்தை முதலில் சேர்த்து வைக்க வேண்டும். அதன்பின்பு தான் நான் யார்? என்று உங்களுக்குள்ளே தேடிக்கொண்டு போக முடியும். பசியால் துடிக்கும் ஒருவனைப் பார்த்து நீ என்னப்பா செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டால் "நான் இப்போது என் உள் ஒளியை தேடிக்கொண்டிருக்கிறேன்" என்றா சொல்வான். வயிற்றுக்கு ஏதாவது வழி இருந்தால் சொல்! என்பான்.

அதனால் புறவிவகாரத்தையும் அகவிவகாரத்தையும் சம்பந்தப்படுத்திக்கொண்டிருக்கக்கூடாது. பணத்தைத் தானம் செய்தால் சொர்க்கம் கிடைக்குமா? கிடைக்காது. பணம் புற விவகாரம்! சொர்க்கம், மதம் இதெல்லாம் அகவிவகாரங்கள். பணத்தைக் கொடுத்து சொர்க்கத்தை வாங்கிவிட முடியாது என்று ஒரு கதையுண்டு.ஒரு பெரிய மனிதன் இருந்தான். வசதியானவன். ஆனால் கஞ்சன். செலவு செய்யமாட்டான். அவன் ஒருநாள் இறந்து போனான். உடனே சொர்க்கலோகத்தின் வாசல் கதவு பக்கமாகப் போய் நின்றான்.

"நான் ஒரு பெரிய மனிதன் வந்திருக்கேன். சொர்க்கவாசல் கதவைத் திறந்து விடு...!" என்றான் அங்கு நின்று கொண்டிருந்த சித்திரகுப்தனிடம். அவன் யோசித்தான். உடனே இவன் தன்னுடைய பையில் இருந்து பத்து ரூபாவை எடுத்துக் கொடுத்தான்.

"இந்தா இதை வைத்துக்கொள். தேநீர் குடி... கதவைத் திறந்துவிடு!" என்றான். சித்திரகுப்தன் சிரித்துக்கொண்டே "இதெல்லாம் பூலோக நடைமுறைகள். இலஞ்சம் கொடுக்கிறது, கதவைத் திறக்கச் சொல்வது எல்லாம்...! அந்த வழிமுறைகள் எல்லாம் இங்கே எடுபடாது. சொர்க்கத்தில் நுழைய தகுதி பெறக்கூடிய அளவுக்கு நீ யாருக்கு என்ன நன்மை செய்திருக்கிறாய்!" என்று கேட்டார்.இவன் யோசித்துப் பார்த்துவிட்டு... "ஒரு மூதாட்டிக்கு ஒருநாள் 10 ரூபா தானம் கொடுத்திருக்கிறேன்... அதன்பின்பு ஒருநாள் அநாதைச்சிறுவனுக்கு 5ரூபா கொடுத்திருக்கிறேன்! என்றான். உடனே சித்திரகுப்தன் தன் பக்கத்தில் இருந்த இன்னொருவரிடம் யோசனை கேட்டார். இந்த ஆள் 15 ரூபா தான தருமம் செய்திருக்கிறான் என்ன செய்யலாம்!" என்று கேட்டார். அதற்கு அவன் "அந்த 15ரூபா காசை இவனிடம் திருப்பிக் கொடுத்து விட்டு இவனை நரகத்திற்கே அனுப்பி வைத்துவிடலாம்" என்றார்.

என்னிடம் எதை வேண்டுமானாலும் கேள்; ஆனால் நேரத்தை மட்டும் கேட்காதே!
- நெப்போலியன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# முகம் தெரியாமல் செய்த முகக் கவசத்துக்கே போற்றி

தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்று மார் தட்டிய இனம் நம் தமிழினம்.

இங்கு தமிழன் என்று சொல்வதற்கும் தலைநிமிர்ந்து நிற்பதற்கும் உள்ள தொடர்பு என்ன? என்று யாரேனும் கேட்டால் அதற்குரிய விளக்கத்தைக் கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

தமிழ் என்பது அமிழ்தத்தின் ஊற்று. தமிழ் என்பதைத் தொடராகக் கூறும்போது அதன் ஓசை அமிழ்தம் என ஒலி தரும்.

தவிர, தமிழன் என்று மார்தட்டுகின்ற போதே வீரம் விளைந்து நிற்கும்.

இஃது மட்டுமல்ல, தமிழ் இனம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருடார்த்தங்களின் வழி நின்று இல்லறம், அறத்தின் வழி பொருள் ஈட்டல், விருந்தோம்பல், பெரியோரைக் கனம் பண்ணுதல், திருமணச் சிறப்பு, ஆன்மிகம் என இந்த உலகம் வியக்கக்கூடிய அத்தனை உயர்பண்பாட்டு விழுமியங்களையும் தன்னகத்தே கொண்ட ஒரு இனமாக தமிழ் இனம் இருப்பதாலேயே நாம் தமிழன் என்று மார்தட்டி தலைநிமிர்ந்து நிற்க முடிகிறது.

இவற்றோடு மட்டும் தமிழினத்தின் பெருமை நின்று விடவில்லை. செம்மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட தமிழ் மொழி உலகிலுள்ள மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி.

தவிர, நடுநிலை நின்று நீதி வழங்கிய தமிழ் மன்னர்களால் ஆளப்பட்ட இனம்.

வந்திருப்பது சிவப்பரம்பொருள் என்று தெரிந்திருந்தும் ஒரு மானிடனாக நின்று நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்று வாதிடும் வல்லமை கொண்டவர்கள் வாழ்ந்த இனம்.

ஆகையால்தான் தமிழன் என்று கூறித் தலை நிமிரும் தகுதி நமக்கு உண்டு.

இதைவிட நம் ஈழத் தமிழினத்தில் வீரம், ஒழுக்கம் நிறைந்த ஓர் உயர்ந்த தியாகத்தைக் கண்டு உலகம் வியந்ததும் சமகாலத்துச் சான்று.

இஃது நம் தமிழ் இனத்தின் தகைமையாய் இருந்த போதும் கொரோனாத் தொற்றைத் தடுக்க அமுலாகி இருந்த ஊரடங்கு தளர்த்தப்பட,

நம் யாழ்ப்பாணத் தமிழ் மண்ணில் மதுபானச் சாலைகளுக்கு முன்னால் நின்ற நீண்ட வரிசையைக் கண்ணுற்ற போது ஓ! தமிழினமே உன் கதி இதுவா? என்று கட்டாந்தரையில் நின்று கதற வேண்டும் போல் இருந்தது.

முடியவில்லையாயினும் மதுபானச்சாலைக்கு முன், வரிசையில் நின்றவர்களின் முகம் மறைத்த முகக் கவசத்துக்குப் (Mask) போற்றி சொல்லி ஆறுதல் கண்டோம் அவ்வளவுதான்.

# பழைய பாராளுமன்றைக் கூட்டும் அதிகாரம் எனக்கு இல்லை

## ஜனாதிபதி கோட்டா வெளிப்படுத்தல்

(கொழும்பு)

தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்தும், உறுதியான கொள்கையொன்றை உருவாக்கும் காலம் இலங்கையில் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொரோனா வைரஸ்பரவலால் பாதிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஜனாதிபதியின் முதன்மை ஆலோசகர் லலித் வீரதுங்கவுடன் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

"நாட்டின் தற்போதைய இக்கட்டான நிலவரம் காரணமாக காலவரையறையன்றி தேர்தலை ஒத்திவைக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருந்தது.

அரசமைப்பிற்கு இணங்க, பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களில் புதிய பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும்.

குறித்த காலத்திற்குள் அரசமைப்பை மீறி பழைய பாராளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரம் எனக்கில்லை. அரசமைப்பை மீறிய எந்தவொரு செயற்பாட்டையும் என்னால் மேற்கொள்ள முடியாது.

எந்தக் காரணம் கொண்டும், பழைய பாராளுமன்றை கூட்டும் அதிகாரம் எனக்கு இல்லை. நாம் தற்போது எமது நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக விசேடமாக சிந்திக்க வேண்டிய காலத்தில் இருக்கின்றோம்.

இதற்கு மீளவும் உயிர் கொடுக்க வேண்டும். பெரிய-நடுத்தர வியாபாரம், ஆடைத் தொழில், ஏற்றுமதி வர்த்தகம் என அனைத்தும் இன்று கொரோனா வைரஸ்தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

எனினும், புதிய பொருளாதார திருத்தமொன்றை மேற்கொள்ள இது எமக்குக் கிடைத்த சிறந்ததொரு சந்தர்ப்பமாகவே நான் கருதுகின்றேன். தேசிய பொருளாதாரக் கொள்கையொன்றை ஸ்தாபிக்க எமக்கு இன்று வாய்ப்பு கிடைத்துள்ளது.

கடந்த காலங்களில், எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களைக் கூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தமையால், எமது நாட்டின் தேசிய உற்பத்தி பாரிய பின்னடைவை எதிர்நோக்கியிருந்தது.

விவசாயிகளின் வாழ்வாதாரம் தொடர்பாக பேசப்பட்டாலும், அதனை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுதான் உண்மையாகும்.

எனவே, இந்தக் காலத்தில் இதனை உறுதிப்படுத்த புதிய தொழில்நுட்பங்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

தேசிய பொருளாதாரக் கொள்கையையே மாற்ற வேண்டும். இதன் ஊடாக மட்டுமே பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மிகவும் பாதுகாப்பான முறையில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமாம்

## செஹான் கூறுகிறார்

(கொழும்பு)

பொதுத்தேர்தலை ஜூன் 20 ஆம் திகதி நடத்த முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து மிகவும் பாதுகாப்பான முறையில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு ஏற்ற பலமான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும்.

கடந்த அரசாங்கத்தில் பலவீனமான பாராளுமன்றம் காணப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான தனிப்பட்ட முரண்பாடுகள் அரச செயலொழுங்கினையும் பலவீனப்படுத்தியது. ஏப்ரல் 21 ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல் இடம்பெறாமல் இருப்பதற்கு இரு அரச தலைவர்களும் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இவ்வாறான பலவீனமான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெறக்கூடாது என்பதற்காகவே பெரும்பாலான மக்கள் ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இந்த மாற்றம் பொதுத் தேர்தலிலும் செல்வாக்குச் செலுத்தும்.

பொதுத்தேர்தலை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகவே உள்ளது. தேர்தலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதும் மக்களை ஒன்றுபடுத்தி தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்த மாட்டோம். பிரதான கூட்டங்கள் மாத்திரமே குறைந்த மட்டத்தில் பாதுகாப்பான முறையில் நடத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### மறு அறிவித்தல் வரை சுன்னாகம் மத்திய சந்தை திறக்கப்படமாட்டாது

(குப்பிழான்)

மறு அறிவித்தல் வரை சுன்னாகம் மத்திய சந்தை திறக்கப்படமாட்டாதென வலி. தெற்கு பிரதேச சபை நிர்வாகத்தால் அறிவித்தல் ஒட்டப்பட்டது. அந்த வகையில் சுன்னாகம் மத்திய சந்தை மற்றும் சுன்னாகம்மீன்சந்தைமுன்பாக குறித்த அறிவித்தல் பிரசுரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதேவேளை, யாழில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த தொடர் ஊரடங்குச் சட்டம் நேற்று முன்தினம் முதல் பகலில் மாத்திரம் தளர்த்தப்பட்ட போதும் மேற்படி சந்தை வியாபாரிகளுக்கு சந்தை வளாகத்தில் வியாபாரத்தில் ஈடுபட வலி. தெற்குப் பிரதேச சபை நிர்வாகத்தால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்றைய தினமே இது தொடர்பான அறிவித்தல் உத்தியோகபூர்வமாக ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-18)

# மீண்டும் கொரோனா பரவும் பேராபத்து

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனீவா)

தற்போது சில நாடுகள் ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றன. ஆனால் சரியான வழிமுறைகள் இல்லாது ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துவதானது புதிய கொரோனா நோய்த்தொற்று அதிகரிப்பதற்கான பேராபத்து நிலவுவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்தது.

உலகம் முழுவதும் கொரோனா தொற்று பரவியுள்ளதையடுத்து தற்போது ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தும் முயற்சியில் சில நாடுகள் ஈடுபட்டுள்ளன. இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்தது.

இது தொடர்பாக மேற்கு பசுபிக் பிராந்திய இயக்குநர் தகேஷி கசாய் தெரிவிக்கையில்,

கொரோனாவால் பாதிக்கப்பட்ட பல நாடுகள் தங்கள் ஊரடங்கை முழுவதுமாக அல்லது பகுதியளவு தளர்த்தி வருவதால், ஊரடங்கை தளர்த்துவது படிப்படியான செயன்முறையாக இருக்க வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளான டென்மார்க், ஜேர்மனி ஊரடங்கை தளர்த்துவதை தொடங்கியுள்ளது. ஊரடங்கை தளர்த்த அமெரிக்காவின் பல மாகாணங்களில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் ஆதரவு தெரிவித்தார்.

பிரேசில் நாட்டிலும் ஊரடங்கை முழுவதுமாக தளர்த்த அந்நாட்டு ஜனாதிபதி ஆதரவாளர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இவ்வாறான சூழ்நிலையில் ஊரடங்கை தளர்த்துவது படிப்படியான செயன்முறையாக இருக்க வேண்டும். முன்கூட்டிய தளர்வுகள் புதிய கொரோனா நோய்த் தொற்றுகள் அதிகரிக்க வழி வகுக்கும்.

குறைந்தபட்சம் தடுப்பூசி அல்லது மிகவும் பயனுள்ள சிகிச்சையைக் கண்டறியும் வரை, ஊரடங்கு செயல்முறை புதிய இயல்பு நிலையாக மாற வேண்டும்.

கொரோனாவுக்கு எதிராக ஊரடங்கு நடவடிக்கைகள் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

நடவடிக்கைகளை எளிதாக்குவது பற்றி நினைக்கும் எந்தவொரு அரசாங்கங்களும் நிலைமையை தொடர்ந்து கண்காணிக்கும் அதே வேளையில் அதை செய்ய திட்டமிட வேண்டும்.

தனிநபர்களும் சமூகமும் புதிய வாழ்க்கை முறைக்கு தயாராக இருக்க வேண்டும். ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அண்மையில் கொரோனா வழக்குகள் அதிகரித்துள்ளன. இது கொரோனா வழக்குகளின் இரண்டாவது அலை குறித்த கவலையைத் தூண்டுகிறது என அவர் தெரிவித்தார். (ஜ)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

ஆண்களுடைய உயர்ந்த அம்சங்களை எல்லாம் தட்டியெழுப்பவும் அவற்றைக் கவரவும் கூடிய ஆற்றல் உள்ளவளே உண்மையான பெண். -டால்ஸ்டாய்

# கொள்ளைக்கும்பல் கொடூரத் தாக்குதல் அப்பாவி மக்கள் 47 பேர் பரிதாபமாகப் பலி!



(அபுஜா)

நைஜீரியாவில் கிராமங்களுக்குள் புகுந்து கொள்ளைக் கும்பல் நடத்திய தாக்குதலில் 47 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

போகோஹறாம், ஐ.எஸ்.உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் ஆதிக்கம் செலுத்தி வரும் நைஜீரியாவில் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

இதனால் அங்கு வாழும் மக்களில் சிலர் குழுக்களாக இணைந்து பொருளாதார தேவைகளுக்காக உணவு பொருட்கள், பணம் உள்ளிட்டவற்றை கொள்ளையடித்து வருகின்றனர்.

ஆயுதம் ஏந்திக் கொள்ளையில் ஈடுபட்டும் இத்தகைய குழுவினர் கிராமங்களுக்குள் நுழைந்து அங்கு வாழும் மக்களை கொன்றும் வீடுகளை எரித்தும் அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு செயற்படும் குழுக்களில் பன்டிட்ஸ் என்ற கொள்ளைக் கும்பல் முக்கியமான ஒன்றாக செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் கட்சினா மாகாணம் டன்முசா, டஸ்சின்மா மற்றும் சஃபானா ஆகிய கிராமங்களுக்குள் பன்டிட்ஸ் கொள்ளைக் கும்பல் நேற்று பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்தது.

மேலும், அந்தக் கிராமங்களில் இருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு வீடுகளில் இருந்த உணவுப் பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

பன்டிட்ஸ் கொள்ளைக் கும்பல் நடத்திய இந்தக் கொடூரத் தாக்குதல் சம்பவத்தில் அப்பாவி பொதுமக்கள் 47 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். (ஜ-2)

## இரண்டரை மில்லியனை நெருங்கும் கொரோனா தொற்றாளர்கள்




(வோஷங்டன்)

உலக நாடுகளில் தீவிரமாகப் பரவியுள்ள கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோயால் தொடர்ந்தும் நாளுக்கு நாள் ஆயிரக் கணக்கான உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

உலக நாடுகளில் இதுவரை 24 இலட்சத்து 81 ஆயிரத்து 541 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 6 இலட்சத்து 47 ஆயிரத்து 744 பேர் குணமடைந்தனர்.

அத்துடன் நேற்று 5 ஆயிரத்து 366 ஆக மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில் இதுவரை மொத்தமாக ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 439 பேர் மரணித்துள்ளனர். (ஜ-2)

## அமெரிக்காவில் கொரோனா கோரத்தாண்டவம்; வெளிநாட்டு குடியேற்றங்கள் இடைநிறுத்தம்

(வோஷிங்டன்)

வெளிநாட்டவர்களின் குடியேற்றத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்தார்.

டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ள அவர், "கண்ணுக்குத் தெரியாத எதிரியின் தாக்குதல் என்று கூறும் அவர் கொரோனா வைரஸை எதிர்கொள்ளவும் அமெரிக்கர்களின் வேலை வாய்ப்பை பாதுகாக்கவும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது" எனக் கூறினார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நிலவரப்படி அமெரிக்காவில் இறந்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதுடன் தொற்றுக்குள்ளானவர்களும் மிக அதிகம். அதனால் உலகின் மிகப் பெரிய எண்ணிக்கையிலான கொரோனா வைரஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள இடமாகவும் மாறியுள்ளது.




கொரோனா வைரஸ் காரணமாக அமெரிக்காவின் பொருளாதாரம் ஸ்தம்பித்துள்ளது. (ஜ-2)

## கச்சாய் எண்ணெய் சரிவு வர்த்தகர்கள் பெரும் அதிர்ச்சி

(வோஷிங்டன்)

அமெரிக்க பங்குச் சந்தையில் ஒரு பரல் கச்சாய் எண்ணெயின் விலை ஒரு டொலருக்கும் கீழ் சென்றதால் வர்த்தகர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

உலகெங்கிலும் கொரோனாவின் கோரத்தாண்டவம் அதிகரித்து வரும் நிலையில் பெரும்பாலான நாடுகளில் ஊரடங்கு அமுலிலுள்ளது.

வாகனப் போக்குவரத்து பெருமளவு முடங்கியுள்ளது. அனைத்து நாடுகளிலும் விமானங்கள் ஓய்வு எடுத்து வருகின்றன.

இதனால் கச்சாய் எண்ணெயின் தேவை வரலாற்றில் இல்லாத அளவுக்கு மிகவும் குறைந்துள்ளது. இந்நிலையில், அமெரிக்க பங்குச்சந்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது முதலே கச்சாய் எண்ணெயின் விலை பெரும் வீழ்ச்சி அடைந்தது.

வரலாற்றில் முதன் முறையாக ஒரு பரல் (158.98 லீற்றர்) கச்சாய் எண்ணெயின் விலை ஒரு டொலருக்கும் கீழ் சென்றது.

விற்பனையாளர்கள் கச்சாய் எண்ணெயை வாங்குபவர்களுக்கு பணம் கொடுத்து எண்ணெயை வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறும் நிலைக்கு வந்துள்ளது.

கச்சாய் எண்ணெயின் விலை ஒரு நாளில் யாரும் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவுக்கு வரலாற்றில் முதன் முறையாக இப்படி சரிவைச் சந்தித்துள்ளதால் உலக நாடுகள் அதிர்ச்சி அடைந்துள்ளன. (ஜ-2)

## மனித பேரழிவுகளுக்குப் பின்னர் இத்தாலியில் ஊரடங்கு தளர்வு



(ரோம்)

கொரோனா வைரஸ் பாதிப்பால் பாரிய மனித அழிவுகளை சந்தித்து வந்த ஐரோப்பிய நாடான இத்தாலியில் எதிர்வரும் 4 ஆம் திகதியில் இருந்து ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நேற்று செவ்வாய்க்கிழமை கருத்து வெளியிட்டுள்ள இத்தாலிய பிரதமர் ஜியூஷெபி கொன்ரே ஷ ஊரடங்கு தளர்வு குறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் இவ்வார இறுதிக்குள் வெளியிடப்படும் என தெரிவித்ததுடன் கொரோனா பெருந்தொடரின் பாதிப்புகள் குறைந்துள்ள இடங்களில் ஊரடங்கு தளர்வு நடவடிக்கைகள் பகுதி பகுதியாக அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய பிராந்தியத்தின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக விளங்கும் இத்தாலியில் கடந்த மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி முதல் நாடளாவிய ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதுடன், அந்நாட்டின் பிராந்திய பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தியிருந்தது. அத்துடன், மக்கள் தமது சொந்த தேவைகளுக்காக வெளியில் நடமாடுவது முற்றாக தடுக்கப்பட்டிருந்த அதேவேளை குறித்த கட்டுப்பாடுகளின் காரணமாக மக்கள் பெரும் நெருக்கடியினையும் எதிர்கொண்டிருந்தனர்.

இத்தாலியில் இதுவரையான காலப்பகுதியில் கொரோனா வைரஸ் பரவலுக்கு இலக்காகி 24,114 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## பாகிஸ்தானில் ஊரடங்குச்சட்டம்; பட்டினியால் கர்ப்பிணிப்பெண் பலி!

(இஸ்லாமாபாத்)

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த பல்வேறு நாடுகள் ஊரடங்கை அமுல்படுத்தியுள்ளன. இதனால் பெரும்பாலான தினசரிக்கூலித் தொழிலாளர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அயல்நாடான பாகிஸ்தானில் சாப்பிடக் கூட வழியில்லாமல் பட்டினியால் கர்ப்பிணிப் பெண் ஒருவர் பலியாகி உள்ளார்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள மிர்பூர் காஸ் மாவட்டத்தின் ஜ°டோ நகரில் வசித்து வருபவர் அல்லா பக்ஸ். இவருடைய மனைவி சுக்ரா பீபி (வயது-30). இவர்களுக்கு 6 குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் சுக்ரா பீபி மீண்டும் கர்ப்பமானார்.

ஏழ்மையில் இருந்தாலும் தினசரிக் கூலித் தொழிலுக்கு சென்று அல்லா பக்ஸ் தனது குழந்தைகள் மற்றும் மனைவியுடன் சந்தோசமாக குடும்பம் நடத்தி வந்தார்.

இந்த நிலையில்தான் கொரோனா வைரஸ் பரவியதால் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இதனால் அல்லா பக்ஸ் வேலைக்கு செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கினார். அவருடைய குடும்பத்தினர் ஒரு வேளை சாப்பாட்டுக்குக் கூட வழியின்றி தவித்தனர். இந்த கொடுமையின் உச்சக்கட்டமாக சுக்ரா பீபி பட்டினியால் கடந்த வாரம் பரிதாபமாக உயிரிழந்தார். (ஜ-2)

## தேர்தல் ஆணைக்...

ஜேவிபியின் பிரசார செயலாளரும் முன்னாள பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலை ஜுன் 20ஆம் திகதி நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் இரவு வெளியிட்டது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜேவிபியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், ஜுன் 20ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் முடிவுக்கு எதிராக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் நிச்சயமாக நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தும் என்று தெரிவித்தார். (ம-3)

## மதுபான விற்...

சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும், மறு அறிவித்தல் வரையில் மதுபான விற்பனை நிலையங்களை மூடுமாறு அரசாங்கம் நேற்று அறிவித்தல் விடுத்துள்ளது.

மதுபான விற்புனை நிலையங்களை திறப்பது சமூக இடைவெளி பேணுதல் உள்ளிட்ட கொரோனா நோய்த் தொற்று எதிர்ப்பு ஆரோக்கிய வழிமுறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என மருத்துவர்கள் உள்ளிட்ட பல வேறு தரப்பினரும் விடுத்த அறிவுறுத்தல்களுக்கு அமைய அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.(ம-3)

## மஞ்சள் தூளின்...

அதக பட்ச சில்லறை விலை ரூபாய் 750 என நுகர்வோர் விவகார அதிகார சபை தெவித்துள்ளது. (ம-3)

## மீண்டும் திறக்கும்...

ஆரம்பிக்கும் முடிவை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவுள்ளது.

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியில் கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை மீண்டும் திறப்பது தொடர்பான எந்த வொரு முடிவும் சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைகளின் பேரில் மட்டுமே எடுக்கப்படும் என தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கான தீர்மானிக்கும் அதிகாரம் துணைவேந்தர்களுக்கு வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

முன்னதாக, அந்தந்த பல்கலைக்கழகங்களின் கல்வி ஊழியர்களுக்கான பணிகளை மீண்டும் தொடங்க முடிவு செய்திருந்தோம் இருப்பினும் முடிந்தவரை ஒன்லைனில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களை கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ம-3)

## இலங்கையில்...

அத்துடன், இதுவரை 310 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை ஏழு பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனா...

களில் ஒத்துழைப்பு, பங்காளித்துவம், முயற்சிகள், அவர்களின் உரிமைகளுக்கு மரியாதையை உறுதிப்படுத்தல் என்ற விடயங்களில் எவரும் பின்வாங்கிவிடக் கூடாது என்று கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

வைரஸிக்கு தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்படும் வரை அது சமூகங்களுக்கு இடையில் பிரிவுகளை அதிகரிக்கும். அத்துடன் பயத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும்.

இந்தநிலையில் உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கலந்துரையாடல் மற்றும் சட்டம் ஒழுங்கை கடைப்பிடித்தல் என்பன அவசியமானவை என்று ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக் காட்டியுள்ளது. (ம-3)

## சுகாதார பிரிவின...

இந்து மாமன்றத்தின் உப தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகம் முழுவதும் வாழும் மக்கள் கொரோனா என்னும் கொடிய நோயின் துன்பத்திலிருந்து விடுபட அனைவரும் தொடர்ந்து பிரார்த்தியுங்கள்.

உயிர்களைக் காப்பதற்காக தமது உயிரையும் பொருட்படுத்தாது மனிதநேயத்தோடு செயற்படும் மருத்துவ சமூகத்துக்கும் ஏனையவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு அவர்களின் வாழ்வுக்காகவும் அனைவரும் கடவுளை மன்றாடுங்கள்.

இலங்கைத் திருநாட்டில் இக்கொடிய நோய் பரவாமல் இருப்பதற்காக பல ஒழுங்கு நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு மருத்துவ சமூகமும், ஏனைய பொறுப்பு மிக்க பெரியவர்களும் விடுத்த வேண்டுதலை அனைவரும் மதித்து நடவுங்கள்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டமை அவசர தேவைகளுக்கு மட்டும் என்பதை அனைவரும் உணருங்கள். மிகப்பாதுகாப்பாக இருக்க வேண்டிய காலமென மீண்டும் மீண்டும் மருத்துவ சமூகம் மன்றாடிக் கேட்டவண்ணமுள்ளார்கள்.

ஆனால் ஊரடங்கு தளர்த்திய வேளை எமது சமூகம் பொறுப்பாக நடக்கவில்லை யென பலரும் கவலையடைகிறார்கள். ஒரு நேரப் பசியையாவது போக்குவதற்கு உதவுங்கள் எனப் பலரும் குரல் கொடுத்த போது தாங்கள் நாட்டின் அவலச்சூழலிலும் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் உதவினர். அவர்களின் உதவிகளால் உலர் உணவும் சமைத்த உணவும் ஊர்தோறும் பலர் வழங்கி உதவினர். உள்ளூர் அமைப்புக்கள், சமய நிறுவனங்கள் இளையவதலை முறை இரவு பகலாகச் செய்த தொண்டுகளை நினைத்துப் பாருங்கள்.

ஊரடங்கு நீக்கப்பட்ட முதல் நாள் முதல் வேலையாக மதுபானக் கடைகளில் வரிசையில் பலர் ஆரவாரமாக நின்று அவமானததை எம் மண்ணுக்கு தேடித் தந்துள்ளார்கள். எனிமேலாவது சிந்தியுங்கள்.

எங்கள் மீது இரக்கப்படும் சமூகம் எவ்வளவுதூரம் கவலைப்படுவர்கள் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

சமூக ஒன்றுகூடலைத் தவிருங்கள். சகல வைபவங்களையும் ஒத்தி வையுங்கள். அனைவரும் பொறுப்புணர்வோடு கொடிய நோய் பரவாமல் காக்க உதவுங்கள். சகல துறைசார்ந்த அதிகாரிகளும், பணியாளர்களும், அமைப்புக்களும் மிகவும் ஒத்துழைத்து, சமூகத்தைக்காக்கும் முயற்சிக்கு கைகொடுங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## யாழில் கொரோனா...

பொதுமக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாததால் யாழில் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வட மாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இணைப்பாளர் த.காண்டீபன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊரடங்குச் சட்டம் யாழ்ப்பாணத்தில் தளர்த்தப்பட்டு உள்ளது. ஆனாலும் நாட்டில் கொரோனா தொற்றும் வாய்ப்புள்ள அசாதாரண நிலை நிலவுவதன் காரணமாக பொதுமக்கள் சுகாதாரத்துறையினால் கூறப்படுகின்ற விடயங்களை கடைப்பிடிக்காமை மீண்டும் யாழ்ப்பாணத்தில் கொரோனா தாக்கம் ஏற்பட்டுவிடும் என அஞ்சுகின்றோம். இதற்கு யாழ்ப்பாணத்தில் மக்கள் மதுபானக் கடைகளில் அளவுக்கதிகமாக கூடியதும் அவர்கள் அளவுக்கதிகமாக கொள்வனவு செய்ததையும் நேற்றைய பத்திரிகைகள் மூலம் அனைவரும் அறிந்து கொண்டோம்.

கொரோனா தொற்று நோய் காலப்பகுதியில் மதுபானம், புகைப்பது கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

1. மதுபானம் குடிப்பவர்கள் சமூகத்தில் சமூக விலகலை கடைப்பிடிக்க மாட்டார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.
2. வழக்கமாக மதுபானம் அருந்துபவர்கள், குழுக்களாக செய்கிறார்கள், எனவே சமூக தூரத்தை பராமரிக்க முடியாது. அது மட்டுமல்ல ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு இலகுவில் தொற்றுவதற்கு சந்தர்ப்பம் அதிகம்.
3. இந்த காலகட்டத்தில் மது அருந்துவதால் யாழ்ப்பாணத்தில் அதிக துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிக்கும். இதனால் இதில் ஈடுபடுபவர்களை பொலிஸார் தேவையின்றி தலையிட வேண்டியிருக்கும்.
4. இந்த காலகட்டத்தில் சமூகத்திற்குள் தேவையற்ற ஒழுக்கச்சரிவு ஏற்படும்.

மதுபானம் பயன்படுத்துபவர்களில் சிலர் புகைப்பிடிக்கும் பழக்கத்திலும் ஈடுபடுவர்.

இத்துடன் புகைப்பிடிக்கும் நபர்கள் கோவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு இந்த நோய் மோசமான விளைவுகளை மட்டுமல்ல மரணத்தையும் ஏற்படுத்தலாம்.

புகையிலை பொருட்களையும் புகைப்பதைத் தவிர்க்குமாறும் மதுபானம் அருந்துவதை தவிர்க்குமாறும் நாங்கள் பொது மக்களுக்கு அறிவுறுத்துகின்றோம்.

இதேவேளை இன்று (நேற்று) மறு அறிவித்தல் வரை நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதனால் பெருமளவிலான பொருளாதார இழப்பு ஏற்பட்டாலும் ஜனாதிபதி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று கொரோனா தொற்றில் இருந்து மக்களின் நலனுக்காக நல்ல முடிவை எடுத்திருக்கின்றார்.

புகைத்தல் மக்களுக்கு கொரோனா நோய் மட்டுமல்ல புற்றுநோய் உட்பட பல் வேறு நோய்களை ஏற்படுத்துவதனால் புகையிலைப் பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்வதை வியாபாரிகள் தவிர்க்குமாறும் வடமாகாண சுகாதாரத்துறையினர் இது சம்பந்தமாக வடமாகாண உயர் அதிகாரிகளுடன் இணைந்து புகைத்தலை இக் கொரோனா தொற்றுக்காலத்தில் முற்றாக கட்டுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டு கொள்கிறோம் என்றுள்ளது. (ம-3)

## மேலும் 6 பேரு...

யாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இதையடுத்து, கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 310 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தையில் 5 பேரும் இரத்தினபுரியில் ஒருவரும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

### வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள

# நான்கு பாடசாலைகள் உடைக்கப்பட்டு திருட்டு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள 4 பாடசாலைகள் உடைக்கப்பட்டு பாடசாலை உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாசாலை, வட்டு கார்த்திகை வித்தியாசாலை, தொல்புரம் விக்னேஸ்வரா, மூளாய் அமெரிக்க மிசன் பாடசாலை என்பவற்றில் இச் சம்பவம் ஒரே பாணியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் பாடசாலை அதிபர்கள் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

மூன்று பாடசாலைகளிலும் அதிபர் அலுவலகம் உடைக்கப்பட்டு, ஒரு பாடசாலையில் 21 ஆயிரம் ரூபாய் பணமும் இன்னுமொரு பாடசாலையில் 11 ஆயிரம் ரூபாய் பணமும் திருடப்பட்டுள்ளது, அத்துடன் ஒலிபெருக்கி சாதனங்கள் என்பனவும் திருடப்பட்டுள்ளது. ஊரடங்கு நேரத்தில் இந்த திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபர்களால் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3,9)

## நேற்று மட்டும்...

சாளர் தெரிவித்துள்ளார்.

அதன்படி இதுவரையில் 34 ஆயிரத்து 500 பேர் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## யாழில் ஊரடங்...

பிரயப்படி அரசாங்கம் ஒரு தேசிய மட்ட தீர்மானம் மேற்கொண்டுள்ளது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-3)

## பொதுத் தேர்தல்...

ஜுன் மாதம் 20 ஆம் திகதியை பொதுத் தேர்தலுக்கான திகதியாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில் திகதியை மீள் பரிசீலனை செய்யுமாறு அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தெரிவித்துள்ளன.

அதற்கமைய தேர்தல் திகதியை மீள் பரிசீலனை செய்ய தேர்தல்கள் ஆணைக்குழு கட்சிகளிடம் இணக்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் கூடி மீண்டும் ஆராயவுள்ளதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜுன் மாதம் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கான திகதியாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்த நிலையில் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் நள்ளிரவு விடுக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய தினம் கட்சி செயலாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவினரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

நேற்று காலை 10.30 மணிக்கு ஒரு கூட்டமும் பிற்பகல் 1.30 மணிக்கு இரண்டாம் கூட்டமுமாக இடம்பெற்ற கலந்துரையாடலில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தமது நிலைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் இப்போது தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு தினத்தை தேர்தல் நடத்த அறிவித்துள்ள போதிலும் இது உறுதியான நிலைப்பாடு அல்ல. தேர்தல் திகதி ஒன்றினை அறிவிக்காது இருக்க முடியாது. திகதி அறிவிக்கப்பட வேண்டியது கடமை யாகும்.

ஆகவே தான் நாம் திகதி ஒன்றினை இப்போது அறிவித்துள்ளோம்.

மே மாதம் 4ஆம் திகதியில் இருந்து அதிகபட்சம் 49 நாட்களுக்குள் வரும் திகதியொன்றை நாம் கூறியுள்ள போதிலும், நாட்டின் கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்த முடியாது போனால் இந்த திகதியிலும் மாற்றங்களை செய்ய நேரிடும்.

மே மாதம் 30 ஆம் திகதி தேர்தலை நடத்த வேண்டும் என ஒரு சிலர் கூறுகின்றனர். அரசியல் அமைப்பினை காரணம் காட்டி சிலர் பேசுகின்றனர்.

ஆனால் அரசியல் அமைப்பிற்கு நாம் பொறுப்புக்கூற வேண்டும் என்பது உண்மையே, ஆனால் அதனையும் தாண்டி மக்களின் உயிரை பாதுகாக்க வேண்டியது எம் அனைவரதும் கடமையாகும் என்றார்.(ம-3)

# ஒன்றுக்கு மேற்பட்ட முறை கொரோனா மனிதனை தாக்கலாம்

## ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கில்பேர்ட் தெரிவிப்பு

**(லண்டன்)**

**புதிய கொரோனா வைரஸ் ஒன்றுக்கு மேற்பட்ட முறை மனிதனை தாக்கலாம் என ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகத்தின் தடுப்பூசி தொடர்பான பேராசிரியர் சாரா கில்பேர்ட் (Professor Sarah Gilbert) தெரிவித்துள்ளார்.**



பிபிசி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட போதே பேராசிரியர் இதனை தெரிவித்துள்ளார்.

முறையான வகையில் நிதி கிடைக்குமானால் இந்த வருடத்தின் செப்டம்பர் மாதத்திற்குள் தடுப்பூசி (Vaccinology) ஒன்றை தயாரிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை விட தடுப்பூசி மூலம் அதிக எதிர்ப்பு சக்தியை உருவாக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளதுடன் கோவிட்-19 வைரசுக்கான தடுப்பூசியைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி குழுவின் தலைவராகவும் செயற்படுகின்றார்.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளின் வைத்தியர்கள் புதிய கொரோனா வைரசைக்கட்டுப்படுத்த தடுப் பூசி மூலம் பரிசோதனை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)





வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 21 |
| 05 | 04 |
| 1935 | 2020 |

## இசைமணி கலாபூசணம் வல்லிபுரம் செல்லத்துரை

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட இசைமணி கலாபூசணம் வல்லிபுரம் செல்லத்துரை நேற்று 21.04.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சாம்பசிவம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவனும், காலஞ்சென்ற முருகையா மற்றும் பேபிசரோஜா, அப்புத்துரை ஆகியோரின் சகோதரரும், செம்மனச்செல்வி, காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் தங்கராணி, மகாலட்சுமி (கனடா), யோகாம்பிகை (சுவிஸ்), அருணகிரிநாதன் (சுவிஸ்), யோகேந்திரன் (கனடா), இந்திராணி, சர்வேஸ்வரி, காலஞ்சென்ற ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும், குகானந்தன், காலஞ்சென்ற நித்தியானந்தகுமார், ஞானமூர்த்தி, சச்சிதானந்தன், அருந்தி, புஸ்பமலர் ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் ஜெயரட்ணம், ஜெயகௌரி, கேதீசன் (கனடா), அகல்யா (பிரான்ஸ்), சிந்துஜா (கனடா), அபர்ணா, விதுர்ஷா, மாதுஷன், மாதங்கி, வைஷ்ணவி ஆகியோரின் பெரியப்பாவும், அனுசனன் (சுவிஸ்), அஜந்தன் (சுவிஸ்), தர்மிதா (கனடா), அஜித்தா (கனடா), கௌரீசன் (கனடா), அகிலா, ஜீவந்தினி, சுகந்தா, கமலன் (அவுஸ்திரேலியா), சுரேஸ்குமார் (பிரான்ஸ்), ரவிராஜ் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜோன்றாஜ வீதி, அச்சுவேலி. (C-9524) தகவல் : குடும்பத்தினர்.

### கொரோனா பரவலை தடுக்க

## அலுவலகங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அலுவலகங்களில் பின்பற்ற வேண்டிய பிரதான நடைமுறைகள் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியிலும் எமது நாட்டிலும் பரவி பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ள அவர், இந்த ஆபத்தான தருணத்தில் முக்கியமான பாதுகாப்பு நடைமுறைகளை வேலைத் தளங்களில் கட்டாயமாகப் பின்பற்றுவதனை உறுதிசெய்து கொள்வதன் மூலமாகவே எம்மையும் எமது சமூகத்தையும் நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இந்நிலையில் பின்வரும் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

1. பணியாளர்கள், பொது மக்கள் தம்மை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்குரிய வழிகாட்டுதல்களை அலுவலக வாயிலில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

2. வேலைத்தளத்தினுள் நுழைவதற்கு முன்பு பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் கைகளைச் சரியான முறையில் சவர்க்காரமிட்டுக் கழுவுதல் அல்லது தொற்று நீக்கியைப் பாவித்து தூய்மைப்படுத்துவதைக் கட்டாயமாக்கவும்.

3. இதற்காக அலுவலகத்தின் நுழைவாயிலிலும் பொருத்தமான ஏனைய இடங்களிலும் கை கழுவும் வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் அல்லது தொற்று நீக்கி பாவனையை உறுதி செய்தல் வேண்டும்.

4. அலுவலகத்தின் அனைத்துப் பகுதிகளையும் தூய்மையாகப் பேணுவதுடன் அலுவலகத்தில் மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் பொதுப் பயன்பாட்டு இடங்கள் மற்றும் தளபாடங்கள், கதவுக் கைபிடிகள், படிக்கைபிடிகள், இலத்திரனியல் உபகரணங்களைப் பொருத்தமான தொற்று நீக்கியைப் பாவித்து கிரமமாக அடிக்கடி தூய்மைப்படுத்தலும் வேண்டும்.

5. கூடுமானவரை அலுவலகத்தின் கதவுகள், ஜன்னல்களைத் திறந்து வைத்திருக்கவும்.

6. சேவை வழங்கும் இடங்களில் சேவை பெறுநர்களின் எண்ணிக்கையை அலுவலகத்தின் உள்ளேயும் வெளியிலும் மட்டுப்படுத்துவதுடன் அலுவலகப் பணியாளர்கள், சேவை பெறுநர்களுக்கிடையில் ஆகக் குறைந்தது 3 அடி இடைவெளி கட்டாயமாக்கப்பட வேண்டும்.

7. கடமை நேரத்தில் உத்தியோகத்தர்கள் சரியான முறையில் முகக்கவசம் அணிந்து கடமையாற்றுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8. மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியுடன் சேவைகளை ஒழுங்குபடுத்துவதோடு வேலை நேரங்களை பணியாளர்களுக்கு பொருத்தமான வகையில் அதிகளவானோர் ஒரே நேரத்தில் ஒன்று கூடாதவாறு தீர்மானித்தல் வேண்டும்.

9. பணியிடங்களில் ஒன்றுகூடல்களின்போது முக்கியமான அங்கத்தவர்கள் மாத்திரம் பங்குபற்றுவதையும் போதிய தனிநபர் இடைவெளியையும் உறுதிப்படுத்தல் வேண்டும். ஒன்றுகூடலின் பின் குறித்த பகுதி உடனடியாக தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.

10. ஒவ்வொரு சேவைகளையும் குறித்தொதுக்கப்பட்ட தினங்களிலும் நேரங்களிலும் திட்டமிட்டு நடைமுறைப் படுத்துவதுடன் பொருத்தமான ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தி மக்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

11. பணியாளர்கள் தமக்கு கொவிட்-19 நோயின் அறிகுறிகளான காய்ச்சல், இருமல், மூச்செடுப்பதில் சிரமம், தொண்டை நோவு போன்ற அறிகுறிகள் சிறிதளவேனும் இருந்தால் கடமைக்கு சமுகமளிப்பதை தவிர்க்கும்படி அறிவுறுத்தவும் என அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.